# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

தனிச்சுற்றுக்கு
நன்கொடை
ரூ-20

ஏப்ரல்-2015

பருவம் 1 புனல் 7



## தாலி :

## இந்துப்பண்பாடும் அல்ல !
## தமிழர் பண்பாடும் அல்ல !



சாதி என்பது, இந்துக்கள் ஒருவரோ டொருவர் கலந்து விடாமல் தடுக்கிற – ஒரு செங்கல் சுவரோ, முள் வேலியோ அல்ல. அப்படி சாதி வெறும் சுவராகவோ, வேலியாகவோ இருந்தால் அதைத் தகர்த்துவிடலாம். சாதி என்பது ஒரு கண்ணோட்டம் – ஒரு மனநிலை. எனவே, சாதியைத் தகர்ப்பது என்றால், வெறும் பவுதீகத் தடையைத் தகர்ப்பது என்பது அல்ல. மாறாக ஒரு சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்துவ தாகும்...

இந்துக்கள் மிக ஆழமான மதப்பற்று உள்ளவர்களாக இருப்பதால்தான் சாதியைப் பின்பற்றுகிறார்கள். சாதியைக் கடைப்பிடிப்பதில் மக்களின் தவறு எதுவுமில்லை. சாதி என்கிற கண்ணோட்டத்தை இந்துக்களின் மனதில் ஆழமாகப் பதிய வைத்து இருக்கிற இந்து மதத்தின் மீதே தவறிருப்பதாக நான் கருதுகிறேன். என்னுடைய இந்தக் கருத்து சரியான தென்றால், நீங்கள் வீழ்த்த வேண்டிய எதிரி – சாதியைக் கடைப்பிடிக்கும் மக்கள் அல்ல; சாதிகளின் மதமான இந்து மதத்தை மக்களுக்குக் கற்றுத் தந்திருக்கிற சாஸ்திரங்களே உங்கள் பயங்கர எதிரி.

– தோழர் அம்பேத்கர்



ஜாதியம் என்பது காலம் காலமாக எமது சமுதாய அமைப்பில் வேரூன்றிக் கிடக்கும் ஒரு சமூகப்பிரச்சனையாகும், வேதகால ஆரிய நாகரீகத்தின் வர்ணகுல அமைப்பி லிருந்து ஜாதிப்பிரிவுகள் தோற்றம் கொண்டன என்றும், பின்னர் திராவிட சமுதாயத்தில் ஜாதியம் வேரூன்றிப் பரவியது என்றும் சில ஆராய்ச்சி யாளர்கள் கூறுகிறார்கள். பிராமணர்கள் வேதநூல்களை எழுதினார்கள். மனுநீதி சாஸ்திரங்களைப் படைத்தார்கள். இவற்றில் எல்லாம் பிராமணரை அதி உயர்ந்த ஜாதியாகக் கற்பித்து ஜாதிய அமைப்பை இறைவனின் படைப்பாக நியாயப் படுத்தினார்கள் என்றும் சில ஆய்வுகள் கூறுகின்றன. மதநெறிகளும், சித்தாந்தங்களும், சட்டங்களும் ஜாதிய முறையை நியாயப்படுத்தி வலுவூட்ட முனைகின்றன.

– விடுதலைப்புலிகள் ஏடு – தை 1991

காட்டாறு
அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

தொகுப்புக்குழு
யாழ் மொழி
பெரியார் செல்வி
பிரபாகரன் அழகர்சாமி
கணியூர் தமிழ்ச்செல்வன்
அ.ப. சிவா
கொளத்தூர் குமார்
செல்லையா முத்துச்சாமி
மே.கா. கிட்டு
பூ. மணிமாறன்

சட்ட ஆலோசனைக்குழு
வழக்கறிஞர் க.ஜெயராஜ்
வழக்கறிஞர் வெ.பழனிச்சாமி
வழக்கறிஞர் பிரபாத்

விளம்பரத் தொடர்பு
சி. விஜயன் 94881 79109,
ஜீவாநகர் குமார் 99944 77013

விற்பனைத் தொடர்பு
ஆ. பாண்டியன் 96591 12891,
கடத்தூர் காந்தி 99428 76665
வெங்கட் 95788 44141

சந்தா தொடர்பு
அ. கிருட்டிணகுமார்
97882 97428

வடிவமைப்பு
Mukizh Media

அச்சு
செல்வக்குமார்
BS Graphics, Chennai

அலுவலக நிர்வாகம்
சி. இராவணன் 97868 89325

ஆக்கங்கள், விமர்சனங்களுக்கு
காட்டாறு, 1 / 810
முத்தமிழ்நகர், நத்தம் சாலை,
திண்டுக்கல். 624003
kaattaaru2014@gmail.com

வெளியீடு:
சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகம்





# புதியவர்களை எழுதவைப்போம்!

## அந்த எழுத்துக்களால்

## புதியவர்களை அமைப்பாக்குவோம்!

காட்டாறு கடந்த 2014 அக்டோபரில் இருந்து 6 இதழ்களை வெளியிட்டுள்ளது. 7 வது இதழ் தங்கள் கையில் உள்ளது. கடந்த 2007 இல் இருந்தே பெரியாரியலை விளக்கும் ஒரு மாத இதழைத்தொடங்க வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இருந்தது. அப்போதிருந்தே அதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டோம். குடி அரசுக்காக கொளத்தூரில் பணியாற்றிக்கொண்டிருந்த காலத்தில் தோழர்கள் திருப்பூர் அங்கக்குமார், மேட்டூர் மே.கா.கிட்டு, முத்துக்குமார், கொளத்தூர் செல்வேந்திரன், இராவணன் ஆகியோர் பலசுற்றுப் பேச்சுக்களை நடத்தினோம். பல கலந்துரையாடல்கள், பல திட்டமிடல்கள் எல்லாம் நடந்தன. ஆனால் செயலில் எதையும் செய்ய முடியவில்லை. தொடர்ந்து நடத்த முடியுமா? பணம் இருக்குமா? செய்திகள் தயாரிக்க முடியுமா? என்று பல கேள்விகள் எங்களை விரட்டிக்கொண்டே வந்தன.

திராவிடர் விடுதலைக் கழகம் தொடங்கிய பிறகும் அதற்கான முயற்சிகள் தொடர்ந்துகொண்டே இருந்தன. இதழுக்காக தனியாக இரண்டு இலட்ச ரூபாய் நிதி திரட்டாமல் இதழைத் தொடங்க வேண்டாம் என உறுதியாக இருந்தோம். 7 வருடமாக அந்த இரண்டு லட்ச ரூபாயைத் திரட்டவே இல்லை. திட்டமிட்டபடி பணம் திரட்டாமல் தொடங்கவேண்டாம் என உற்ற நண்பர்கள் பலர் பலமான எச்சரிக்கைகளைக் கொடுத்துக்கொண்டுதான் இருந்தனர். ஏன் இந்தத்தற்கொலை முயற்சி? என தோழமையுடனும் அறிவுறுத்தினார்கள்.

அச்சு ஊடகத்தில் பெரியாரியலைக் கொண்டு செல்லும் ஏடு என புதிதாக எதுவும் தோன்றாத நிலை, அனைத்து அறிவுரைகளையும் புறந்தள்ளும் நிலைக்கு எங்களைக் கொண்டு சென்றது. இணைய தளங்களில், முகநூல் விவாதங்களில் ஏராளமான பெரியாரியலாளர்கள் எழுதிவருகிறார்கள். ஆனால் இணையதளப் பக்கமே எட்டிப்பார்க்காத உலகம் இன்னும் இருக்கிறது. அவர்களுக்குச் செய்தியைக் கொண்டு சேர்க்கும் அச்சு ஊடகத்தின் தேவை கருதி துணிச்சலுடன் இறங்கினோம். நாங்களே எதிர்பாராத அளவுக்கு வரவேற்பைப் பெற்றோம். முதல் இதழ் 500 தான் அச்சிட்டோம். இரண்டே நாட்களில் அது தீர்ந்தது. உடனே அதே முதல் இதழை மீண்டும் 500 அச்சிட்டோம். அதுவும் தீர்ந்தது. 7 வது இதழ்வரை 1000 இதழ்களை அச்சிடுகிறோம். அனைத்தும் விற்பனை ஆகிவிடுகிறது.

1000 இதழ்களையும் வீடுவீடாக நேரடியாகக் கொண்டு செல்கிறோம். அதற்காக நேரம் செலவழிக்க இயலாத சூழலால் 1000 என்ற இலக்கைத் தாண்ட முடியவில்லை. அந்த 1000 இதழ்களுக்கான தொகையைப் பெறுவதற்கு பெரும்பாலும் இரண்டுமுறை நேரடியாக வாசகர்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. அதற்கான நேரவிரயம், பணவிரயம் ஆகியவற்றைத் தவிர்க்கும் பொருட்டு ஆண்டுச் சந்தாவைத் திரட்டுவோம் என முடிவுசெய்யப்பட்டது.

அதற்காக சுயமரியாதை கலை பண்பாட்டுக்கழகத்தின் மாநில கலந்துரையாடல்கூட்டத்தை ஏற்பாடு செய்தோம். 22.03.2015 அன்று பல்லடத்தில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் காட்டாறு ஏட்டிற்கு 1000 சந்தாக்களைத் திரட்டுவது என்று முடிவெடுக்கப்பட்டது. ஒரு மாதத்திற்குள் சந்தா திரட்டும் பணியை முடிக்கவேண்டும் என்றும், வரும் மே 17 இல் பொள்ளாச்சி அல்லது கிணத்துக்கடவில் சந்தா அளிக்கும் விழாவைக் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி தலைமையில் நடத்துவது என்றும் முடிவு எடுக்கப்பட்டது.

புதியவர்களை எழுதவைப்பது, அந்த எழுத்துக்களால் புதியவர்களை அமைப்பாக்குவது என்பதைச் செயல் இலக்காக வைத்தோம். பத்துக்கும் மேற்பட்டோர் புதிதாக எழுதுகின்றனர். அவற்றைப் படிப்போர் பெரும்பாலானோர் - 90 சதவிகிதத்துக்கும் மேற்பட்டோர் புதியவர்களே. இன்னும் ஏராளமானோர் எழுதவேண்டும். படைப்புகளை வழங்கவேண்டும். வரவேற்கிறோம். சு.க.ப.க தோழர்கள் தங்களிடம் வருவார்கள். நண்பர்கள், ஆதரவாளர்கள், இளைஞர்கள், மாணவர்களிடம் சந்தா பெற முயற்சி செய்யுங்கள். ஏற்கனவே அமைப்புகளில் பணியாற்றும் தோழர்களிடம் செல்வதைவிட, எந்த அமைப்புகளிலும் பங்கேற்காத புதியவர்களிடம் சந்தா பெற முயற்சி செய்யுங்கள். சிறிய இலக்குதான். சின்னச்சின்னச் செயல்களானாலும் திட்டமிட்டுப் பணியாற்றுவது பெரிய வெற்றிகளுக்குப் படிக்கலாகும். ஏப்ரல் 14 முதல் மே 15 வரை அக்கறையுடன் பணியாற்றுவோம். மே 17 இல் இலக்கை அடைவோம்.

# காதலுக்குப் புது இலக்கணம்

- பள்ளிபாளையம் இரமேசு

ஹார்மோன்கள் ஹலோ சொல்லி
காதல் கொண்டேன் பெண்ணே !
உன்
கட்டழகு தேகம் கொண்டு
கட்டுடைந்தேன் நானே !
காதல் என்றும் வருவதுதான்
அது எல்லோர் வாழ்விலும் ஒருமுறை தான்,
இது விஞ்ஞானத்தை மறந்த காதல்.
காதல் என்றும் இருப்பது தான்,
எல்லோர் வாழ்விலும் ஒருமுறையென்பது
ஒரு பெண் மேல் ஒருமுறைதான்,
இது விஞ்ஞானத்தில் பிறந்த காதல்.
வந்து வந்து போவதற்கு
காதலென்ன விருந்தாளியா ?
அது
வருவதுமில்லை
போவதுமில்லை.
சந்தர்ப்பங்கள் சந்தித்தால்
காதல் அங்கே வெளிப்படும்.
இல்லையென்றால்,
அது வெளியே சொல்ல வெட்கப்படும்.
இதயம் காணம
காதல் இல்ல
காதலுக்கும் காமத்துக்கும்
சம்மந்தம் இல்ல,
இன்னொருவர் அன்புக்கு
ஆட்பட்டு நான் போக
நீ வைக்கும் கண்டிப்பை
என்னவென்று சொல்ல ?
கள்ளகாதல்
காதலில் இல்ல,
இந்த
ஊர் சொல்லும் நல்ல காதல்
உலகத்தில் இல்ல.
காதலுக்கும் ஹார்ட்டுக்கும்
சம்மந்தம் இல்ல
காமம் இல்லாம
காதலே இல்ல.
காமம் என்பது
கீழ்த்தனமான ஒன்றல்ல,
பேசக்கூடாத ஒன்றல்ல,
பலவந்தமாக்கும் ஒன்றல்ல,
வெட்க்கப்பட வேண்டிய ஒன்றல்ல,
விற்கப்பட வேண்டிய ஒன்றல்ல,
அது கற்கப்பட வேண்டிய ஒன்றே !.



# மாட்டிறைச்சியில் உள்ள அவசியமான சத்துக்கள்

Dr.பெரியார்செல்வி

உலகெங்கும் மனிதர்களின் உணவுப் பழக்கத்தை சைவம் அசைவம் என இரண்டு வகையாக பிரித்து விடலாம் ஆனால் இந்துமதம் பரவியிருக்கிற இந்தியாவில் மட்டும் ஒரு வினோதம் இங்குள்ள இந்துக்களில் சைவம், அசைவம் மற்றும் அசைவத்தில் மாட்டுக்கறி உண்ணுவோர் என மூன்று வகை ..

பெரும்பான்மையான இந்துமக்களால் தீண்டத்தகாத உணவாக ஒதுக்கி வைக்கப் பட்டுள்ள மாட்டுக்கறி உணவின் சத்துப்பட்டியல் இதோ ..

வைட்டமின் ( B Complex)

| | | |
|---|---|---|
| தையமின் | ( B1 ) | - 4 % |
| ரிபோஃபோலின் | (B2) | -15% |
| நியாசின் | (B3) | - 36% |
| வைட்டமின் | (B6) | - 29% |
| போலட் | (B9) | - 9 mg |
| வைட்டமின் | (B12) | - 2.64 mg (110) |
| கோலின் - | 17% | (82.4)mg |
| வைட்டமின் | D | -1%(71 m) |
| வைட்டமின் | E | - 3%(0.45mg ) |
| வைட்டமின் | K | -1 % (1.2 mg) |
| புரதம் | | - 26 g |
| கால்சியம் | | - 18 mg |
| இரும்பு | | - 2.6 mg (20.1) |
| மங்கனிசியம் | | - 21 mg (6%) |
| பாஸ்பரஸ் | | -198 mg (28%) |
| பொட்டாசியம் | | -318 mg |
| சோடியம் | | - 72 mg |
| துத்தநாகம் | | - 6.31 mg |
| நீர்சத்து | | - 58 g |

**பிகாம்ப்ளக்ஸ்-** இரத்த சிவப்பு அணுக்களை அதிகரிக்கிறது. பசியின்மையைப் போக்குகிறது. நரம்புத் தளர்ச்சியை போக்குகிறது இதன் மூலம் பக்கவாதத்தை தடுக்க உதவுகிறது. முதல் தர புரதம், துத்தநாகம், வைட்டமின் பிகாம்ப்ளக்ஸ் மற்றும் 3 வது தர இரும்புச் சத்து உள்ளது.

**புரதம்-**தசைகளின் வளர்ச்சிக்கு உதவுகிறது, வலுவான தசைகளை உருவாக்குகிறது

**துத்தநாகம்-**நோய் எதிர்ப்புத் திறனை உருவாக்குகிறது காயங்களைக் குணப்படுத்த உதவுகிறது.

**பாஸ்பரஸ்-**பற்கள் மற்றும் எலும்புகளை வலுவாக்க உதவுகிறது,

**இரும்பு -** ஆக்ஸிஜனைக் கடத்தி இரத்தச் சிவப்பு அணுக்களை அதிகரிக்கிறது. தசைகளின் தளர்ச்சியைப் போக்கி தசைகளை வலுவாக்குகிறது

மாட்டு இறைச்சியில் உள்ள ஊட்டசத்து டீன் ஏஜ் வயதினருக்கு சிறந்த ஊட்டசத்தைக் கொடுத்து அவர்களின் இரத்தச் சிவப்புஅணுக்களை அதிகரிக்கிறது, தசைகளை வலுவாக்கி, எலும்புகளின் வளர்ச்சியை ஊக்கவிக்கிறது விளையாட்டு வீரர்கள் தினமும் மாட்டிறைச்சி உண்பதன் மூலம் அவர்களின் உடல் வளைவுத் தன்மை (Flexiblity) மற்றும் எலும்புக்கு வலு கொடுத்து சிறப்பாக விளையாட உதவுகிறது. (US ஆய்வறிக்கையின் படி) மாட்டுக் கறி உண்ணும் நாடுகள் (குட்டி நாடுகள்) ஒலிம்பிக் பதக்கப்பட்டியலில் முதலிடம் பிடிக்கிறது. மாட்டின் புனிதம் பேசும் இந்தியா (120 கோடி மக்கள்) பதக்கப்புள்ளிப்பட்டியலில் இடம் பெறவே போராடுகிறது .

ஆண்களின் முதல் ஈர்ப்பு தோற்றம் என்றால் பெண்களை ஈர்ப்பது எது என்பது மனிதன் தோன்றிய காலத்திலிருந்து ஆண்களின் மனதை குடையும் கேள்வி.

ஆண்களைப் போல் அல்லாமல், பெண்கள் ஓர் ஆண் மீது ஈர்க்கப்படுவதற்கு பல காரணங்கள் உள்ளன. அவற்றைப் புரிந்து கொள்ள பெண்ணின் இயல்பை புரிந்து கொள்வது அவசியமாகிறது.

பெண்கள் இயல்பிலேயே எச்சரிக்கை உணர்வு அதிகம் கொண்டவர்கள். ஆதி மனுசி தொடங்கி இன்று வரை பெண்களுக்கு உள்ள பொறுப்புகள் அதிகம். ஆண்கள் பொதுவாகவே பொறுப்பை ஏற்கத்தயங்குபவர்கள். பொறுப்பு அவர்கள் மீது திணிக்கப்பட்டதாகவே உள்ளது. வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் அந்தப்பொறுப்புகளிலிருந்து விடுபட்டு ஓடவே ஆண்கள் விரும்புகின்றனர். ஆனால் பெண் இயல்பிலேயே பொறுப்பை ஏற்கத் தயங்காதவள். இதனாலேயே தொடக்கத்தில் பெண் தலைமைப் பொறுப்பேற்று குழுவை நடத்தி வர முடிந்திருக்கிறது. ஆண்கள் அதிகாரத்தை விரும்பும் அளவிற்கு பொறுப்பை விரும்புவதில்லை. அதனால்தான் ஆண் தலைமையேற்ற போது பொறுப்புகளை பெண் வசம் விட்டுவிட்டு அதிகாரத்தை மட்டும் தன் கையில் எடுத்துக் கொண்டான். இன்று வரை அந்த நிலையே தொடருகிறது.

# காதலைப் புரிந்து கொள்வோம்

எனது தேவையெல்லாம்
என் மன பாரங்களை
இறக்கி வைக்க
ஒரு தோள்..
முடிந்தால்
நான் சொல்வதை
முழுமையாகக் கேள் ..
உன் கரங்களால்
என் கண்ணீரைத்
துடைத்து விடு ..
அணைத்துக் கொள்
ஆதரவாய் ..
குறைந்த பட்சம்
புரிதலாய் ஒரு பார்வை ..
அது போதும் எனக்கு ..
என்னை கோழையாக்கி
அவமானப்படுத்தும்
உன் இரக்கம்
தேவையில்லை எனக்கு ..
உன் அறிவுரைகளையும்
ஆலோசனைகளையும்
உன்னுடனேயே வைத்துக்கொள்
தேவையெனில்
நானே கேட்பேன் ..
என் கண்ணீரின் மீதேறி
என்னை
ஆதிக்கம் செலுத்த
முயற்சிக்காதே ..
என்ன செய்ய வேண்டுமென்று
தெரியும் எனக்கு!



பூங்குழலி

3

**காதலில் ஈர்க்கப்படுவதற்கு தோற்றம் ஓர் அடிப்படையாக உள்ளது என்பது உண்மை என்ற போதிலும் அப்படி நாம் கற்பனை செய்து வைத்தத் தோற்றத்திற்கு சற்றும் பொருந்தாத ஒருவர் மீதும் கூட ஈர்ப்பும் காதலும் வருவது எதனால்?**

பெண் தலைமையேற்கும் தகுதியுடையவள் என்பதை ஆண் உணர்ந்ததாலேயே மீண்டும் மீண்டும் அவள் மனதில் அவளைப் பற்றிய தாழ்வு மனப்பான்மையை ஆண் உலகம் ஏற்படுத்தி வந்துள்ளது. அவளால் முடியாது, அவள் ஆணை சார்ந்தே வாழ வேண்டும் என்ற பிம்பத்தை மிக அழுத்தமாக அவள் மனதில் ஆண் உலகம் விதைத்துள்ளது. ஆனால் உண்மை நேர் எதிரானது. ஓர் ஆணால் தான் பெண்ணை சாராமல் வாழவே முடியாது என்பதே உண்மை.

50 வயதிற்கு மேல் துணையை இழந்த ஆண்களையும் பெண்களையும் ஒப்பிட்டு நோக்கினால் இது தெளிவாக விளங்கும். துணையை இழந்த பெண்கள் அந்த வேதனை ஒரு புறம் இருந்த போதும் மிக இயல்பாக அன்றாட வாழ்வில் பொருந்தி விடுகின்றனர். ஆனால் அந்த வயதிற்கு மேல் தன் துணையை இழந்த ஆண் செயலற்றுப் போகிறான். ஏனெனில் தன் காரியங்களைக் கூட அவன் தானே செய்து கொண்டது இல்லை. தனது அன்றாட வாழ்வில் ஒவ்வொன்றிற்கும் பெண்ணைச் சார்ந்தே அவனது வாழ்வு இருந்துள்ளது. மிகவும் பரிதாபகரமான நிலையில் திகைத்துப் போகிறது அவனது வாழ்க்கைப் பயணம்.

ஆனால், ஆணைச் சாராமல் வாழும் திறன் வாய்ந்த ஒரு பெண்ணின் மனதில் அந்தத் துணிவும் நம்பிக்கையும் இருப்பதே இல்லை. ஏனெனில் சிறு வயது முதல் அவள் மனதில் அவளைப் பற்றிய பிம்பம் ஆணை விடத் தாழ்வானவளாகவே ஏற்படுத்தப்பட்டுள்ளது. பெண்களைப் பற்றிய சொல்லாடல்கள், பழமொழிகள், நாம் பகிர்ந்து கொள்ளும் நகைச்சுவைத் துணுக்குகள் என அனைத்துமே இதையே அவளுக்குச் சொல்கின்றன. நகைச்சுவைக்காக என்று நாம் பார்வர்டு மற்றும் ஷேர் செய்யும் நகைச்சுவைத் துணுக்குகள் உண்மையில் பெண்ணின் மனதில் தாழ்வு மனப்பான்மையை அழுத்தமாக விதைக்கிறது என்பதை நாம் உணர்வதே இல்லை.

இப்படி ஆழப்பதிந்து விட்ட தாழ்வு மனப்பான்மை காரணமாக பெண்கள் மனதில் பாதுகாப்பற்ற தன்மை ஏற்படுகிறது. இதனால் யாரிடம் அவளுக்கு பாதுகாப்பு உணர்வு ஏற்படுகிறதோ அவர்களிடமே பெண் பெரும்பாலும் ஈர்க்கப்படுகிறாள். அத்துடன் இயல்பிலேயே பொறுப்பு மிக்கவளான பெண் அந்தப் பொறுப்பை ஆணிடமும் எதிர் பார்க்கிறாள். தலைமையேற்று நடத்தும் பண்பின் காரணமாக தன் சிறு சிறு ஏவல்களை ஆண் செய்ய வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறாள். இவை எதுவும் அவள் தன்னை உணர்ந்து எதிர்பார்ப்பவை அல்ல. தன்னையும் அறியாமல் ஆழ் மனதில் உள்ள எதிர்பார்ப்புகள்.

பெண் எதிர்பார்க்கும் பாதுகாப்பு உணர்வை ஓர் ஆணிடம் பல வகையில் அவள் அடையாளம் காணலாம். ஒரு பெண் பெரும்பாலும் முதன் முதலாக பாதுகாப்பு உணர்வு பெறுவது அவளது தந்தையின் அருகில்தான். எனவே தந்தையிடம் கிட்டிய பாதுகாப்பு உணர்வை அவள் தன் துணையிடமும் எதிர்பார்க்கிறாள். அது தோற்றமாக இருக்கலாம், அல்லது பேசும் முறை, பழகும் விதம், ஏன் சில சமயங்களில் சார்ந்திருக்கும் துறையாக கூட இருக்கலாம். ஏதோ ஒன்று தன் தந்தையின் சாயலில் தோன்றும் போது பெண் இயல்பாக தன் தந்தையிடம் கிட்டிய பாதுகாப்பு உணர்வை அந்த ஆணிடமும் எதிர்பார்க்கலாம் என்று நம்பிக்கை பெறுகிறாள்.

அதே நேரம், தந்தையிடம் பாதுகாப்பு உணர்வு கிட்டாத பெண்ணிற்கு தந்தையின் சாயல் தோன்றுவதே எதிர் மனநிலையை ஏற்படுத்திவிடுகிறது. தந்தைக்கு நேர்மாறான இயல்பு கொண்டவர்களை நோக்கியே அவளது கவனம் ஈர்க்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, மெல்லிய குரல் கொண்ட, இயல்பு கொண்ட தந்தையிடம் பாதுகாப்பு உணர்வு கிட்டாத பெண்ணிற்கு, கனத்த குரல் கொண்ட ஆண்களை பிடிக்கக் கூடும். குடிப் பழக்கம் கொண்ட தந்தையின் மகளுக்கு குடிக்கும் ஆண்களை கண்டாலே பிடிக்காமல் போய் விடலாம்.

மற்றொரு புறம் சினிமா தோன்றிய காலத்திலிருந்து பெண்ணையோ அல்லது பெண்ணின் உடைமைகளையோ வில்லன்களிடமிருந்து காப்பாற்றும் ஆணை பெண் காதலிப்பதான சித்திரம் ஓரளவு உண்மையானதுதான். இதுவும் பாதுகாப்பு உணர்வு என்ற அடிப்படையில் ஏற்படும் ஈர்ப்புதான். பலவானான ஓர் ஆணை, சிக்ஸ் பேக் உடம்புடன் கூடிய ஓர் ஆணை பெண்கள் இரசிப்பதும் பாதுகாப்பு உணர்வின் அடிப்படையில்தான்.

அதே சமயம் இதே பாதுகாப்பு உணர்வு அதீதமாக உடைய பெண்கள்தான் சந்தேகப் பேர்வழிகளாகவும் உள்ளனர். தான் விரும்பும் ஆண் யாரிடம் பேசினாலும் பொறுக்காதவர் களாக உள்ளனர். பாதுகாப்பு உணர்வின்

அடிப்படையாக உள்ள தாழ்வு மனப் பான்மையின் காரணமாக தனது துணை தன்னை விட்டு விலகிவிடக் கூடுமோ என்ற அச்சம் அவர்களை மிகுதியாக ஆட்டிப் படைக்கிறது. இவர்கள் தான் விரும்பும் ஆணின் கவனத்தை தங்கள் பக்கமே தக்க வைத்துக் கொள்ள எதையும் செய்யவும் தயாராகின்றனர். அதீத கோபம், உணர்ச்சி வசப்படுதல், இவற்றின் உச்சமாக தன்னைத் தானே காயப்படுத்திக் கொள்ளுதல், தற்கொலை முயற்சி வரை அனைத்தும் இப்படியான தக்கவைக்கும் முயற்சிகளே.

ஆனால் என்றுமே பொறுப்புகளை ஏற்க விரும்பாத ஆண்களுக்கு இந்த கவன ஈர்ப்பு செயல்கள் அலுப்பையும் எரிச்சலையும் ஏற்படுத்துகின்றன. கட்டிப் போடுவது போல் உணரும் ஆண் தப்பி ஓடவே நினைக்கிறான். தன் மீது கொண்ட காதலின் காரணமாகதான் பெண் அப்படி நடந்து கொள்கிறாள் என்று உணர்ந் தாலும் அந்தக் காதல் அவனை மூச்சு முட்டச் செய்கிறது.

மற்றொரு புறம், பாதுகாப்பு உணர்வின் காரணமாக ஓர் ஆணிடம் ஈர்க்கப்படும் பெண்ணிற்கு, பெரும்பாலும் காதலின் தொடக்க நிலையில் அவனது ஆளுகைக்குள் பாதுகாப்பாக இருப்பது அவளுக்கு பரவசம் அளிக்கிறது. ஆனால் நாள் செல்ல செல்ல அவளது இயல்பான தலைமைப் பண்பு தலைத் தூக்குகிறது. ஆண் தன்னைப் பாதுகாக்க நினைப்பதே அவளுக்குச் சுமையாகிறது. தனது கடினமான தருணங்களில் தனக்குத் துணையாகவும், ஆறுதலாகவும் அவன் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கும் அதே நேரத்தில் தனக்காக அவனே எல்லா முடிவுகளையும் எடுப்பதை அவளது தலைமைப் பண்பு ஏற்பதில்லை. எப்போது அவளை அரவணைக்க வேண்டும், எப்போது ஆலோசனை கூற வேண்டும், எப்போது அவளை அவள் போக்கில் விட வேண்டும் என்று புரியாமல் எப்போதும் ஒரே மாதிரியாக அவளிடம் நடந்து கொள்ளும் ஆண், அவளது எதிர்வினைகளை பார்த்து குழப்பமடைகிறான். அவள் மாறி மாறி நடப்பதாக கருதுகிறான். உண்மையில் தாழ்வு மனப்பான்மைக்கும் தலைமைப் பண்புக்கும் இடையில் சிக்கித் தவிக்கும் பெண்ணின் மனநிலையே அது என்பதை இருவருமே உணர்வதில்லை. இது இருவருக்குமிடையிலான உறவில் அழுத்தத்தை ஏற்படுத்துகிறது.

பாதுகாப்பு உணர்வின் பெயரால் அடங்கிப் போகவோ, அடக்கி ஆளப்படவோ ஒரு போதும் ஒரு பெண் விரும்புவதில்லை. ஆனால் அதை அந்தப் பெண்ணே உணர்வதில்லை என்பதே வேதனையான உண்மை. பாதுகாப்பு உணர்வை மட்டும் அடிப்படையாக வைத்து ஈர்க்கப்படும் உறவு எதிர்காலத்தில் பெரும் மனச்சிக்கலில் ஆண்-பெண் இருவரையும் கொண்டு விடுகிறது.

அதே போன்று காதலின் தொடக்கக் காலத்தில் பெண்ணின் சிறு சிறு ஏவல்களை மகிழ்ச்சியுடன் செய்யும் ஆண்கள், மணமான பிறகு அவற்றை செய்வதை விரும்புவதில்லை. இயல்பான பொறுப்பேற்க தயங்கும் தன்மையோடு, ஆணாதிக்க மனநிலையில் அவ்வாறான வேலைகளை செய்வது கவுரவக் குறைச்சலாகவும் பார்க்கப்படுகிறது. ஒன்று, உனக்கொன்றும் தெரியாது என்று ஒரேடியாக ஒதுக்கி விடுவது அல்லது எல்லா பொறுப்புகளையும் பெண் மீது சுமத்திவிடுவது என்ற இரு நிலைகளுக்கு இடையே கலந்து பேசி செய்வது என்பதே ஆணின் உலகத்தில் இருப்பதில்லை. பெண்ணோ எதுவாயினும் கலந்து பேசி முடிவெடுக்க நினைக்கிறாள். அப்படி ஆலோசனை கேட்கும் பெண்ணிடம் நீயே முடிவெடுத்துக் கொள் என்று சொல்வதே பெண்ணுக்கான உரிமையை அளிக்கும் செயல் என பலரும் நம்புகின்றனர். தான் எடுக்க வேண்டிய முடிவில் அவளது ஆலோசனையைப் பெறுவதும், அவள் எடுக்க வேண்டிய முடிவில் தனது முடிவை திணிக்காமல் கருத்தை மட்டும் சொல்வதும் நட்பான உறவிற்கு அடிப்படை. இந்த இயல்பு பொதுவாக நம் சமூகத்திலேயே மிகவும் அரிதானது. அதிலும் ஆண் பெண் உறவில் மிக மிக அரிதாக உள்ளது.

இந்தப் பின்னணியில், ஒரு பெண், பொறுப்பேற்பதும், தலைமைப் பண்புமே தனது இயல்பான குணங்கள் என்பதையும் பாதுகாப்பு உணர்வு என்பது தன் மீது திணிக்கப்பட்ட உணர்வு என்பதைப் புரிந்து, துணையைத் தேர்ந்தெடுக்கும் போது அந்த உணர்வின் அடிப்படையில் மயங்கி விடாமல் யோசிக்க வேண்டும். மற்றொரு புறம் தாங்கள் பெண்களை காக்க வந்தவர்கள் என்ற மன நிலையிலிருந்து ஆண்களும் விடுபட வேண்டும். இதுவே ஆரோக்கியமான உறவிற்கு உதவும்.

காதலில் ஈர்க்கப்படுவதற்கு தோற்றம் ஓர் அடிப்படையாக உள்ளது என்பது உண்மை என்ற போதிலும் அப்படி நாம் கற்பனை செய்து வைத்த தோற்றத்திற்கு சற்றும் பொருந்தாத ஒருவர் மீதும் கூட ஈர்ப்பும் காதலும் வருவது எதனால்? வரும் இதழ்களில் பார்ப்போம்.



# உத்திரப்பிரதேச அதிகார மய்யங்களின் பார்ப்பன ஆதிக்கம்

தமிழில்: பிரபாகரன் அழகர்சாமி

1. முன்னுரை :

தில்லியிலிருந்து அலகாபாத்திற்குப் பலமுறை நாம் பயணம் செய்திருக்கிறோம். அந்தப்பயணங்கள் ஒவ்வொன்றும் புதிய செய்திகளையும் முடிவில்லாத புதிய அனுபவங்களையும் நமக்குத் தொடர்ந்து கற்றுக்கொடுத்துக் கொண்டேயிருக்கிறது.

இந்தியாவின் பல்வேறு சமயங்களையும், ஜாதிகளையும், சமூகங்களையும் சேர்ந்தமக்களும், தங்களுக்கு இடையே இருக்கும் வேற்றுமைகளைக் கடந்து இணக்கமாக வாழும் ஒரு இடமாக தில்லி ஒரு (போலியான) தோற்றத்தைக் கொண்டிருக்கிறது.

தில்லியில் வாழும் மக்களின் பெயருக்குப்பின்னால் இருக்கும் ஜாதிப் பெயரைக் (surname) கொண்டு பார்த்தோமானால், பல்வேறு ஜாதிகளைச் சேர்ந்தவர்கள் வாழும் ஒரு பன்மைத்துவ சமூகமாக, எந்தவொரு குறிபிட்ட ஜாதியினரும் ஆதிக்கம் செலுத்துவது போன்ற தோற்றமில்லாத இடமாக இது தெரிகிறது.

நாங்கள் அதிகநேரத்தைச் செலவழிக்கின்ற பல்கலைக்கழக வளாகங்களில், ஜாதியைப் பற்றிய உரையாடல்கள் பொதுவாக இடம்பெறுவது கிடையாது அல்லது ஜாதி பற்றிய உணர்வுள்ளவர்களாகக் காட்டிக் கொள்வது கிடையாது. கிராமங்களிலும் சிறுநகரங்களிலும் வெளிப்படையாகவும், கொடுமையானதாகவும், எல்லா இடங்களிலும் விரவியிருப்பது போன்ற ஒரு தன்மையில் ஜாதியின் பிடி தில்லியில் இல்லை என்று சொல்லலாம்,

ஆனால் அலகாபாத்தில் நிலைமை சற்றுவித்தியாசமானது. அரசு நிறுவனங்களிலும் பொதுஅமைப்புகளிலும் ஒருசில குறிப்பிட்ட சமூக மக்களில் (அதிலும் குறிப்பாக ஆண்களின்) ஆதிக்கம் நிலவுவதை, அவர்களின் பெயர்களின் பின்னால் உள்ள உயர்ஜாதிப் பெயர்களான ஷர்மா, திரிபாதி, ஸ்ரீவஸ்தவா போன்ற வெளிப்படையான அடையாளங்களைக் கொண்டு, நாம் கண்டுகொள்வதற்கு அதிககாலம் எடுத்துக்கொள்வதில்லை. அதன்பிறகு, நல்லதோ கெட்டதோ, ஜாதிபற்றிய விழிப்புணர்வுடனே நாம் எல்லாவற்றையும் பார்க்கத் தொடங்கிவிடுகிறோம்.

பல தலித்திய சிந்தனையாளர்களின் கூற்றுப்படி பார்த்தால் தில்லியிலேயும் கூட இத்தகைய நிலைமைதான் பெரும்பாலும் நிலவுகிறது. அலகாபாத்தில் இது சற்று தெளிவாக வெளிப்படையாக தெரிகிறது. அலகாபாத்தில் மக்களிடையே நிலவுகிற ஜாதிய அமைப்பு பற்றி, ஒப்பீட்டளவில் தில்லி போன்ற பகுதிகளைவிட வெளிப்படையாக நமக்குத் தெரிவதனால், அங்கு அரசு நிறுவனங்களிலும் பொது அமைப்புகளிலும் நிலவுகிற ஜாதியப் பிரதிநிதித்துவம் பற்றிய ஆய்வினை நம்மால் மேற்கொள்ள முடிகிறது. அதுவே இந்த கட்டுரையின் நோக்கம்.

கட்டுரைக்குள் போவதற்கு முன், ஒரு விசயத்தை எச்சரிக்கையுடன் தெளிவு படுத்திக் கொள்ள விரும்புகிறோம். மக்கள் தங்கள் பெயருக்குப் பின்னால் போட்டுக் கொண்டிருக்கிற பட்டப் பெயர்களைக் கொண்டு அவர்களுடைய ஜாதியை யூகித்ததின் அடிப்படையிலேயே இந்த ஆய்வின் முடிவுகளை நாங்கள் முன்வைக்கிறோம்.

இத்தகைய ஆய்வுமுறையை பலர் வெற்றிகரமாக நடத்தியிருக்கிறார்கள்.அந்த ஆய்வுகளின் மூலம் அவர்கள் கண்டறிந்த உண்மைகள் பொதுவான சமூக அமைப்பு முறையை (Pattern) புரிந்துக்கொள்வதற்குத் தேவையான நம்பகத்தன்மையை கொண்டிருக்கிறது என்ற போதிலும், சிறிதேனும் குறிப்பிடத்தக்க அளவில் பிழைகள் ஏற்பட இதில் வாய்ப்புகள் உள்ளது என்பதை நாம் மறுப்பதற்கு இல்லை.

2011 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சமூக - பொருளாதார மற்றும் ஜாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் (Socie-Economic and Caste Census – SECC) அடிப்படை நோக்கங்களில், அனைத்து ஜாதிகளின் சமூக - பொருளாதாரப் பண்புகளைப் பற்றிய விரிவான, நம்பகமான தகவல்களைச் சேகரிப்பது என்பதுவும் ஒன்று. விரைவில் அந்தக் கணக்கெடுப்பின் முடிவுகள் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கிறோம். அது வெளியிடப்பட்டால் இதுபோன்ற ஆய்வுகளை இன்னும் ஆழமான முறையில் நடத்த வாய்ப்பாக இருக்கும். அதுவரை, இதுபோன்ற பெயருக்குப் பின்னால் இருக்கும் ஜாதி / பட்டப் பெயர்களைக் கொண்டு தோராயமான ஆய்வு முறைகளை பின்பற்றவேண்டிய நிர்பந்தத்தில் நாம் இருக்கிறோம்.

**2. ஜாதி, தொழில், அதிகாரம்**

சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்பு, அதிகாரமும் பெருமிதமும் மிக்க உயர்பதவிகளில் நிலவும் ஜாதிய சமத்துவமின்மை பற்றிய இதுபோன்ற ஆய்வினை டாக்டர் பி.ஆர். அம்பேத்கரே செய்திருக்கிறார். அதில், சென்னை மாகாணத்தில் வெறும் 3% மட்டுமே இருந்த பார்ப்பனர்கள், அதிகாரமும் சலுகைகளும் நிறைந்த உயர்பதவிகளில் பெரும்பகுதியைக் கைப்பற்றி இருந்தார்கள் என்ற உண்மையை வெளியிட்டிருந்தார். 1948 ஆம் ஆண்டு, மாதம் 100 ரூபாய்க்குமேல் சம்பளம் பெறக்கூடிய அரசு உயர் பதவிகளில் 37 சதவிகிதத்தையும், இடைநிலை அரசுப்பணிகளில் 44 சதவிகிதத்தையும் பார்ப்பனர்கள் ஆக்கிரமித்திருந்தனர்.

மத்தியஅரசுப் பணிகளில் அத்தகைய முறையற்ற(ஜாதி அடிப்படையிலான சமபங்கற்ற) ஒருநிலைதான் இன்றளவும் நிலவுகிறது. சமீபத்தில் நடந்த ஒரு ஆய்வின்படி, மத்தியஅரசின் அதிகாரமிக்க உயர்மட்ட அளவிலான பணியிடங்களில், தலித்துக்கள் மற்றும் ஆதிவாசிகளின் இடம் என்பது கிட்டத்தட்ட இல்லவே இல்லை என்ற எண்ணிக்கையில்தான் உள்ளது. உதாரணத்திற்கு, மார்ச் 2011 ஆம் ஆண்டு அந்த ஆய்வு நடத்தப்பட்டபோது, துறைச்செயலாளர் (Secretary) பதவியில் ஒரு தலித்கூட இருக்கவில்லை.மற்ற உயர்பதவிகளில் தலித்துகள் மற்றும் ஆதிவாசிகளின் பங்கு என்பது மிகமிகச் சொற்பமானதாகவே இருக்கிறது.

**அட்டவணை - 1: அரசுப்பணிகளில் உயர்மட்டத்தில், பட்டியல் ஜாதியினர் (SC) மற்றும் பட்டியல் பழங்குடியினர் (ST) பெற்றிருக்கும் இடங்கள் (14 - மார்ச் - 2011)**

| பதவிநிலை | இடங்கள் | SC | ST |
|---|---|---|---|
| துறைச்செயலாளர் | 149 | 0 (0) | 4 (2.7) |
| கூடுதல்செயலாளர் | 108 | 2 (1.9) | 2 (1.9) |
| துணைச்செயலாளர் | 477 | 31 (6.5) | 15 (3.1) |
| இயக்குனர் | 590 | 17 (2.9) | 7 (1.2) |

(மொத்த இடங்களில் பட்டியல் சமூகத்தைச் சேர்ந்த அதிகாரிகளின் விழுக்காடு அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டிருக்கிறது)

வாய்ப்புகள் மறுக்கப்பட்ட ஜாதியைச் சேர்ந்தவர்கள், இன்று கல்வி வளர்ச்சியினாலும் இடஒதுக்கீட்டினாலும், மத்திய அரசுப்பணிகளில் ஓரளவுக்கு உயர்பதவிகளில் தங்களுடைய பங்கினைப் பெறுவதில் கொஞ்சம் முன்னேறியிருக்கிறார்கள். 1965 இல், பட்டியல்ஜாதியினர் (SC) மற்றும் பட்டியல் பழங்குடியினரின் (ST) பங்கு என்பது, குரூப் A வில் 2.4%, குரூப் B இல் 3.4%, , குரூப் C இல் 10.3%, என்பதாகும். அதுவே 2003 ஆம் ஆண்டு, முறையே 16.1%, 18.6%, மற்றும் 22.8%, ஆக உயர்ந்திருக்கிறது. அரசு நிறுவனங்களில் உயர்பதவிகளில் தலித்துகளும் ஆதிவாசிகளும் இடம் பெறுவதென்பது அவர்களுக்கு சமூகத்தில் ஒரு கண்ணியம்மிக்க உணர்வை வழங்குவது மட்டுமல்லாமல், அவர்களுடைய பொருளாதார மேம்பாட்டிற்கும் அதன் மூலம் சமூகத்தில் இதரவாய்ப்புகளைப் பெறுவதற்கும் துணைபுரிகிறது. மேலும், அரசு நிர்வாகத்திற்கும் சமூகத்தில் பின்தங்கிய, வாய்ப்புகள் மறுக்கப்பட்ட மக்களுக்கும் உள்ள இடைவெளியைக் குறைக்கிறது.

ஊடகத்துறையிலும் தலித்துகள் மற்றும் ஆதிவாசிகளுக்கு இடமே இல்லாத சூழலே நிலவுகிறது .1996 ஆம் ஆண்டு,மூத்த பத்திரிக்கையாளரான பி.என்.உனியால், பிரபல ஆங்கில இதழான “திபயனியர்” இல் தலித் பத்திரிக்கையாளரைத்தேடி என்று ஒரு கட்டுரை எழுதினார், அதில் தன்னுடைய 30 வருட பத்திரிக்கைத்துறை அனுபவத்தில், இதுவரை ஒருதலித் பத்திரிக்கையாளரைக்கூடச் சந்திக்கவில்லை என்று எழுதினார்.

இதனைத் தொடர்ந்து, தலித் சிக்சா அந்தோலன் என்ற அமைப்பின் தலைவரும், தலித் எழுத்தாளர் மன்றம் என்ற அமைப்பின் ஒருங்கிணைப் பாளரும் இணைந்து, இந்திய பத்திரிக்கை ஆசிரியர் மன்றம் (Editors Guild of India) மற்றும் இந்தியப் பத்திரிக்கையாளர் சபை (Press Council of India) ஆகியவற்றிடம் ஒரு கோரிக்கையை வைத்தனர்.

மக்கள்தொகை விகிதாச்சாரத்தின் அடிப்படையில் ஒவ்வொரு ஜாதியப் பிரிவினரும் பெற்றிருக்கும் அளவைப்போலவே ஊடகத்துறையிலும் உரிய இடங்களைப் பெறவேண்டும் என்ற கோரிக்கையுடன் அந்த நிலையை அடைவதை உறுதிசெய்ய தேசியஆணையம் ஒன்றை அமைக்கவேண்டும் என்றும் கோரியிருந்தனர்.

அந்தக்கோரிக்கைகள் குறித்து இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதோடு மட்டுமல்லாமல், 21 ஆம் நூற்றாண்டிலும் இந்திய ஊடகத்துறையில் பன்முகத்தன்மை இல்லாத சூழலே நிலவுகிறது. 2006 ஆம் ஆண்டு, 'வளரும் சமூகம் குறித்த ஆய்வுமையம்' என்ற ஒரு அமைப்பு, இந்தியாவின் தேசிய அளவிலான 40 ஊடக நிறுவனங் களைப்பற்றிய கணக்கெடுப்பு ஒன்றை நடத்தியது. அந்த நிறுவனங்கள் எதிலும், முக்கிய முடிவெடுக்கும் இடங்களில், தலித் அல்லது ஆதிவாசி சமூகத்தைச் சேர்ந்த ஒருவர்கூட இல்லை என்றநிலையைக் கண்டனர். அந்த இடங்களின் 71 சதவிகிதத்தை உயர்ஜாதி ஆண்களே கைபற்றியிருந்தனர்.

ஐந்து ஆண்டுகளுக்கு மேலான பிறகு, இன்றுவரை இந்தியாவின் ஊடகத்துறையில் தலித் மற்றும் ஆதிவாசிகளின் இடம் அப்படியேதான் இருக்கிறது எனலாம். பட்டியல் சமூகத்தினருக்கு இடம் இல்லாத இந்த ஊடகங்களின் தன்மை என்பது, அவர்கள் வெளியிடத் தேர்ந்தெடுக்கும் செய்திகளிலும், அதை வெளியிடும் முறையிலும் நேரடியாக பிரதிபலிக்கிறது. பட்டியல் சமூகத்தினர் குறித்து சமூகத்தில் நிலவுகிற முன்முடிவுகளை வலுப்படுத்துவதோடு அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய அங்கீகாரத்தை மறுப்பதற்கு இது துணைபுரிகிறது.

தலித்துகள் மற்றும் ஆதிவாசிகளுக்கு உரிய பிரதிநிதித்துவம் இல்லாத நிலை உயர்கல்வித் துறையிலும் நிலவுகிறது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி பெறப்பட்ட தகவலின்படி, 2010 - 11 ஆம் ஆண்டுகளில், மத்தியஅரசின் நிர்வாகத்தில் உள்ள 24 பல்கலைக்கழகங்களில், பட்டியல் சமூகத்தினருக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள ஆசிரியர் பணியிடங்களில் 48.5% இடங்கள் நிரப்பப் படவில்லை. அந்தப்பணியிடங்களின்படி நிலை அதிகரிக்க அதில் காலியாக விடப் பட்டிருக்கும் இடங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது. உதாரணத்திற்கு, இணைப்பேராசிரியர் பணிஇடங்களில் 84 சதவிகிதமும், பேராசிரியர் பணியிடங்களில் 92 சதவிகிதமும் காலியாக இருந்திருக்கிறது.

நாட்டின் வர்த்தகத்துறையும் உயர்ஜாதியினரின் ஆதிக்கத்திலேயே இருக்கிறது. 2010 ஆம் ஆண்டின் கணக்கின்படி, பொருளாதார மதிப்பின் வரிசைப்படி முதல் ஆயிரம் தொழில் நிறுவனங்களில் தலைமைப்பொறுப்பில் உள்ளவர்களில் 93 சதவிகிதத்தினர் உயர்ஜாதி / முன்னேறிய சமூகத்தைச் சேர்ந்தவர்கள். உயர்ஜாதியினர் தொழில் நிறுவனங்களின் தலைமைப் பொறுப்பில் இருப்பதனால், அவர்களுடைய பொருளாதார பலத்தைத் தக்கவைத்துக் கொள்வதோடு மட்டுமல்லாமல், அரசியல் முடிவுகளிலும் ஆதிகாரம் செலுத்தக் கூடியவர்களாக இருக்கிறார்கள். தொடர்ந்து நடத்தப்படுகிற பல பொருளாதாரக் கணக்கெடுப்புகளின்படி பார்த்தால், தலித்துகளில் தொழில் முனைவோரின் எண்ணிக்கை அவர்களுடைய மக்கள் தொகையைவிட மிகக்குறைவானதாக இருக்கிறது.(1990 இல் 9.9 %, பிறகு 2005 இல் 9.8 %)

2012 ஆம் ஆண்டின் கணக்கின்படி, இந்தியாவின் பெரும் பணக்காரர்களில் முதல் 46 பேரில், ஒருவர் மட்டும் முஸ்லீம் சமூகத்தைச் சேர்ந்தவர், தலித் மற்றும் ஆதிவாசி சமூகத்தைச் சேர்ந்த ஒருவர்கூட கிடையாது. அதில் 28 பேர், பனியா (மார்வாடிகள் உட்பட), பார்சி, சிந்தி ஆகிய வணிக சமூகத்தைச் சேர்ந்தவர்கள். மற்ற உயர்ஜாதி சமூகத்தைச் சேர்ந்த சிலரும், பிற்படுத்தப்பட்ட ஜாதியைச் சேர்ந்த சிலரும் அதில் உள்ளனர். இந்தியாவில் முதல் 10 பணக்காரர்களில் 8 பேர், மக்கள்தொகையில் வெறும் 2% மட்டுமே இருக்கிற பனியா சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்று ஃபோர்ப்ஸ் (Forbes) என்னும் உலக அளவில் வெளியிடப்படும் வணிக இதழில் ஆக்கர் பட்டேல் என்பவர் குறிப்பிடுகிறார்.

கவுரவமான விளையாட்டாகக் கருதப்படுகிறவற்றில் உயர்ஜாதியினரே அதிக இடங்களைப் பிடித்து வைத்துள்ளனர். 2008 ஆம் ஆண்டின்படி, இந்திய கிரிக்கெட் அணியில் 11 பேரில் 7 பேர் பார்ப்பனர்கள். இந்திய கிரிக்கெட் அகாதெமியின் தலைவரிடம் இதுகுறித்து ஒருமுறை கேட்டபோது இதுவெறும் தற்ச்

செயலானது என்று அவர் பதிலளித்தார். போலோ என்கிற விளையாட்டே (குதிரைமீது அமர்ந்தபடி விளையாடப்படும் ஹாக்கி) தங்களுக்கு மட்டுமே உரியதாக ராஜ்புத் சமூகத்தினர் கருதுவதாக கரன் தேஜ்பால் என்பவர் ஒரு கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

பெருமையும் கவுரவமும் நிறைந்த பணிகளாகக் கருதப்படுகின்றவற்றில் நிலவுகின்ற இத்தகைய உயர்ஜாதியினரின் ஆதிக்கத்தின் எதிரிணையாக, வாய்ப்புகளும் சலுகைகளும் மறுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களில் பெரும்பான்மையினர் கடுமையான உடலுழைப்பிலும் கண்ணியம் குறைவானதாகக் கருதப்படுகிற வேலைகளையும் செய்யவேண்டியவர்களாக இருக்கிறார்கள். உதாரணத்திற்கு, பொது இடங்களைச் சுத்தப்படுத்தும் அரசுப்பணியில் இருக்கும் துப்புரவுப் பணியாளர்களில் 40 சதவிகிதத்தினர் தலித்துகள். அதிலும் குறிப்பாக மனிதக்கழிவுகளை அகற்றிச் சுத்தம் செய்கிற பணியில் இருக்கிற சுமார் 3 லட்சம் துப்புரவுப் பணியாளர்களில் கிட்டத்தட்ட அனைவருமே தலித்துகள் மட்டுமே.

2004-05 ஆம் ஆண்டுக்கான இந்திய மனித வளர்ச்சி கணக்கெடுப்பின்படி, உத்திரப்பிரதேசத்தில் பல்வேறு விதமான தொழில்களில் / பணிகளில் பெரும்பான்மையான சமூகக்குழுக்களின் பங்கு என்னவாக இருக்கிறது என்பதைக் கீழ்காணும் அட்டவணையில் (அட்டவணை 2) காணலாம். பெருமைமிக்க பணிகளாக மற்றும் நல்ல ஊதியம் தரக்கூடிய பணிகளாக உள்ள தொழில் மேலாண்மை, பொறியியல், வழக்கறிஞர், ஆசிரியர், கணக்காளர் போன்ற பணிகளில் உயர்ஜாதியினரே ஆதிக்கம் செலுத்துகின்றனர். எடுத்துக்காட்டாக, உத்தரப்பிரதேச மக்கள்தொகையில் ஐந்தில் ஒரு பகுதியாக இருக்கிற உயர்ஜாதியினர், பெருமையும் கவுரவமும் மிக்க பணிகளாகக் கருதப்படுகிற தனியார் நிறுவனமேலாளர், பொறியாளர், ஆராய்ச்சியாளர், மருத்துவர் உள்ளிட்ட பணிகளில் அரைபாகத்தில் இருந்து முக்கால் பாகம் வரையிலான இடங்களைக் கைப்பற்றியுள்ளனர்.

- அங்கிதாஅகர்வால், ஜீன்டிரேஸ், ஆஷிஷ்குப்தா

அட்டவணை - 2

உத்திரப்பிரதேசத்தில் பல்வேறு தொழில்களில் வெவ்வேறு சமூகப் பிரிவினரும் பெற்றிருக்கும் பங்கு (%)

| பதவிநிலை | OC | OBC | முஸ்லீம்கள் | SC | OTHERS |
|---|---|---|---|---|---|
| தனியார் நிறுவனங்களில் மேலாளர்கள் | 74 | 26 | 0 | 0 | 0 |
| பொறியாளர்கள், விஞ்ஞானிகள், மருத்துவர்கள் | 63 | 21 | 10 | 5 | 1 |
| எழுத்தர்கள், எழுத்துப்பணி உதவியாளர்கள் | 47 | 26 | 14 | 9 | 4 |
| வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள், கணக்காளர்கள் | 42 | 32 | 12 | 12 | 2 |
| காவல்துறை | 32 | 46 | 6 | 13 | 3 |
| தொழில்நுட்பப் பணியாளர்கள் | 24 | 37 | 18 | 18 | 3 |
| வாகன ஓட்டுநர்கள் | 19 | 27 | 36 | 17 | 1 |
| உணவகப் பணியாளர்கள் | 10 | 38 | 13 | 38 | 1 |
| தனிப்பயிற்சிப் பெற்ற உடலுழைப்பாளர்கள் | 7 | 31 | 31 | 28 | 3 |
| பயிற்சி பெறாத உடலுழைப்பாளர்கள் | 6 | 35 | 15 | 42 | 2 |
| விவசாயத் தொழிலாளர்கள் | 3 | 36 | 11 | 48 | 2 |
| அனைத்துத் தொழில்களையும் சேர்த்து | 21 | 37 | 19 | 22 | 1 |

( மற்றவர்என்பதுஆதிவாசிகள், சீக்கியர்கள் ஜெயின், கிறித்தவர்கள்உள்ளிட்டவர்கள் )

Ankita Aggarwal, Jean Dreze, Aashish Gupta
Economic & Political Weekly 07.02.2015

- தொடரும்

# சுயமரியாதை வாழ்வே சுக வாழ்வு

அரசூர் அ.ப.சிவா

## திங்கறதும் - தொங்கறதும்

6

புண்ணாக்கு போட்டவர்களுக்கு
தெரியாதா புனிதம் ..

தொழுவத்தில்
தவுடு புண்ணாக்கு
கலக்கும் தாத்தாவை
முழங்கை வரை நக்கும் .
குலம் காக்கும் சாமிடா..
தடவியவாறு தாத்தா .

காளைக் கன்னு
ஈன்ற போது கரிச்சு கொட்டினார்
குடி கெடுத்த மூலி .
ம்மா ம்மா கத்திய கன்றை
இழுத்து விட்டு கறந்தெடுப்பார் .

பாரம் இழுக்கும் வண்டியில்
மூக்காணங்கயிறை இழுத்தவாறு
சாட்டையைச் சுழற்றுவார்
வண்டிக்கார பெரியப்பா
இப்ப ஆட்டோக்கார பெரியப்பா

படுக்கையில் தாத்தா
வத்தக் கறவை
வித்துப்போடு
முணங்கியவாறு ..

புண்ணாக்கு போட்டவர்களுக்கு
தெரியாதா புனிதம் ...

**கலாச்சார காவலனாய்...**

அன்று

இரவு வீடு திரும்பாத
அப்பாவைப்
கழுத்திலுள்ள தாலியை இழுத்தவறே
கரிச்சு கொட்டுவாள் அம்மா .

தொட்டு தாலி கட்டியவனை
கத்தியவாறு எட்டி உதைப்பார் அப்பா

வீட்டுப்பாடம் எழுதியபடியே
பயமாய் பார்ப்போம் .
பின்
மளிகை கடை பாக்கிக்காய்
பேங்க் லாக்கரில்..
மஞ்சள் கயிற்றுடன் அம்மா .

இன்று

கலாச்சார காவலனாய்
காவி வேட்டியுடன் அப்பா .

அப்பன் இடுப்பு துண்டை
தோளில் போட்டாவாறே கேட்டான்
யார் பெரியார்??

## பிறந்தநாள் நன்கொடைகள்

பொள்ளாச்சி இரா.தனலெட்சுமி - சி.விஜயராகவன் இணையர்களின் பேத்தியும், மீனாட்சி - லோகநாதன் இணையர்களின் மகளுமான மீ. லோ. இலக்கியாவின் பிறந்தநாளை ( 13. 04. 2015 ) முன்னிட்டு காட்டாறு ஏட்டிற்கு ரூ1000.00 நன்கொடை வழங்கப்பட்டது.

திருப்பூர் ஜீவாநகர் குமார் - பரமேஸ்வரி இணையரின் மகள் இளமதி பிறந்தநாளை ( 06.04.2015 ) முன்னிட்டு ஏட்டிற்கு ரூ500.00 நன்கொடை வழங்கப்பட்டது.

'திராவிடர் கலைக்குழு' தோழர் திருப்பூர் கிருஷ்ணவேணி தனது பிறந்தநாளை ( 11. 04. 2015) முன்னிட்டு காட்டாறு ஏட்டிற்கு ரூ500.00 நன்கொடை வழங்கினார்.

அனைவருக்கும் காட்டாற்றின் வாழ்த்துக்கள். நன்றி.

# பெண்களுக்கும் உண்டு பாலியல் ஆசைகள்!

பெண்ணடிமை அனைத்து நாடுகளிலும் பல்வேறு வடிவங்களில் உள்ளது. குறிப்பாக, ஓர் ஆணாதிக்க சமுதாயத்தில் பெண்ணடிமைத் தனத்திற்குப் பல்வேறு கோரமான முகங்கள் உண்டு! பெண்ணியப் பார்வையுடைய பல சமூக விஞ்ஞானிகளின் கூற்றுப்படி, "கலாச்சாரம் கெட்டுவிடும் என்பதற்காகப் பெண்கள் தங்கள் பாலியல் ஆசைகளை (Sexual Desires) வெளிப்படுத்தக் கூடாது" என்பது பெண்ணடிமைத்தனத்தின் ஓர் மோசமான வடிவம்! 'பாலியல்' (Sex) என்ற வார்த்தை ஆண்களுக்குரியதாகவே அனைத்து நாடுகளிலும் உள்ளது. அது ஆண்களின் ஆசைகளால் மட்டுமே ஆட்சி செய்யப்படுகிறது!



ஆணாதிக்க சமூகத்தில் (பெரும்பாலும் அனைத்து நாடுகளிலும்) உலவும் பாலியல் 'கற்பிதங்கள்?'

1. உடலுறவிற்கான "முதல் நகர்வு (First Move)" ஆண்களுடைய வேலை என்றே பெரும்பாலான ஆண்களும் பெண்களும் நினைக்கிறார்கள்! அவர்கள் மூளையில் ஆழமாகப் பதிந்த பாலியல்உண்மை(SexFact) அது!

2. உடலுறவைப் பற்றிக் கற்றுக் கொடுப்பதும், ஆரம்பிப்பதும் ஆண்களின் வேலை; பெண்கள் பெற்றுக் கொள்பவர்கள்! உடலுறவைப்பற்றி அறிந்த பெண்கள் தாசிகள் மட்டும்தான்! ஒரு குடும்பப் பெண்ணுக்கு அதைப் பற்றித் தெரியக் கூடாது!

3. பெண்கள் இனப்பெருக்கத்திற்காக; ஆண்கள் உடலுறவிற்காக! அதுவே இரு பாலினங்களின் உடலியல் மற்றும் உளவியலின் அடிப்படையிலான உண்மை!

4. ஆண்களுக்கே பெண்களை விட பாலியல் உணர்ச்சிகள் மற்றும் ஆசைகள் அதிகம்!

5. ஒருவனுக்கு ஒருத்தி (Monogamy) என்ற கலாச்சாரம் ஆண்களுக்கு அவ்வளவு பொருத்தமானது அல்ல! ஏனெனில் உடலுறவைப் பொறுத்த வரை ஆண்களுக்குத் தான் கற்பனை வளம் (Creative Sexuality) அதிகமாதலால் அவர்கள் பல்வேறு வகையான பாலுறவை பல பெண்களிடம் எதிர்பார்ப்பார்கள்.

6. ஆண்களுக்கு எப்போதும் செக்ஸ் வேண்டும்; ஆனால் ஓர் உறவில் பெண்களுக்கு நெருக்கமும், புரிதலும், அன்பும் தான் தேவை! அதனால் தான் ஆண்கள் விபச்சாரக் கூடங்களில் உடலுறவிற்காகப் பெருமளவு பணத்தை செலவு செய்கின்றனர்!

இவையனைத்தும் மோசமான ஆணாதிக்க சமுதாயத்தாலும், கலாச்சாரக் காவலர்களாலும் கட்டமைக்கப்பட்டு பெண்களின் மூளைகளிலும் கூட ஏற்றி வைக்கப்பட்ட பொய்யான கூற்றுகளே என அறிவியல் பூர்வமாக அடித்து உடைத்தெறிந்த ஓர் உண்மையான ஆய்வைப் பற்றிய பதிவே இக்கட்டுரை! நமக்கு உடலுறவைப் பற்றியும், ஆண், பெண் உடலியல் மற்றும் உளவியல் பற்றியும் தெரிந்தவற்றை மறு ஆய்விற்கு உட்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம்! சமூகக் கட்டமைப்பையும் கணக்கில் கொண்டு மேற்கொள்ளப்பட்ட அறிவியல் ஆய்வுகளின் படி, ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே மாதிரியான பாலியல் விருப்பங்கள் தான்!

பெண்கள் உணர்ச்சிகளை அடக்கிக்கொள்ள வேண்டும் என்ற கலாச்சாரம் தொன்று தொட்டு பின்பற்றப்படுவதால் ஆணாதிக்கம் தலைவிரித்தாடும் பல நாடுகளின் அறிவியல் ஆய்வுகளும் மேலே கூறப்பட்டுள்ள பொய்யான தரவுகளையே நமக்குக் கொடுத்திருக்கின்றன.

**பெர்க்னரின் கூற்றுகள்:**

சமூக ஆய்வறிஞர்கள் (Social Scientists), உளவியலாளர்கள் (Psychologists) மற்றும் பாலியல் ஆய்வாளர்களின் (Sexologists) ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு, பாலின சமத்துவத்தில் இதுவரை பாலியல் ரீதியாக எவரும் பார்க்காத அறிவியல் பார்வையோடு, டேனியல் பெர்க்னர் (Daniel Bergner)எழுதிய 'வாட் டு விமன் வான்ட்: அட்வென்சர்ஸ் இன் தி சயின்ஸ் ஆஃப் ஃபீமேல் டிசையர் ( What Do Women Want? Adventures in the Science of Female Desire)'' என்ற புத்தகம் பல புதிய தகவல்களைத் தந்துள்ளது.பெர்க்னர் தன் புத்தகங்களுக்காக இரு விருதுகளைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. 'வெஜைனல் லெத்திஸ் மோகிராஃப் (vaginal plethysmograph)' என்ற கருவி ஒளியின் மூலம் பெண்களின் பாலியல் தூண்டுதல்களை அளக்கப் பயன்படுகிறது. அதன் மூலம் கிடைத்த தகவல்களையும் அடிப் படையாகக் கொண்டுள்ளது இந்நூல்! "ஆண்களால் உருவாக்கப்பட்ட பாலியல் கூற்றுகளை ஆண்கள் கைவிட மறுப்பதால் உருவானதே இந்த மோசமான பாலின ஏற்றத்தாழ்வுகள்!" என்ற உண்மை, சமூகக் கட்டமைப்பு அடிப்படையிலும் அறிவியல் ஆய்வில் இணைத்துக் கொண்ட ஆய்வுகளின் அடிப்படையிலும் உருவான இந்நூலில் தெள்ளத் தெளிவாக வெளிப்பட்டுள்ளது.

"விலங்குகள் மற்றும் மனிதர்கள் மத்தியில் பெண்ணின் காமம் மற்றும் பாலியல் துவக்கத்திற்கான (Sex Initiation) சான்றுகள் இருந்தும், மதக்கூறுகளால் கட்டமைக்கப்பட்ட சமூகம் நம் மூளையில் (ஆராய்ச்சியாளர்களும் இதில் அடக்கம்) ஏற்றி வைத்துள்ள பாலின ரீதியிலான கூற்றுகள் ஆராய்ச்சியாளர்களின் கண்களை மூடிவிட்டன" என்கிறார் பெர்க்னர்.

"பெண்களின் பாலியல்ஆசைகள் - அதன் உள்ளார்ந்த வீச்சும் உள்ளார்ந்த சக்தியும் இன்றும் 21-ஆம் நூற்றாண்டில்கூட குறைத்தே மதிப்பிடப்படுகிறது. ஆனால் அது அறிவியல் பூர்வமான உண்மையல்ல!", என்றும் "சமூகக் கட்டமைப்பில் போதுமான சமத்துவம் இருந்திருந்தால் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கலாச்சாரம் பெண்களுக்கும் பொருத்தமற்றதாக இருந்திருக்கலாம்!" என்றும் அவர் எழுதுகிறார்.

**சமூகம் மற்றும் அறிவியல் ஆராய்ச்சிகளின் முடிவுகள் :**

நாம் நினைத்துக் கொண்டிருப்பதை விட பெண்களுக்கு மிகவும் வீரியமான, ஆண்களைப் போன்றே மிகவும் வீரியமான பாலியல் உணர்ச்சிகளும், விருப்பங்களும் உண்டு. இதனை 'லெத்திஸ்மோகிராஃப்' என்ற கருவி தான் கண்டறிந்துள்ளது. பெண்களின் காம உணர்ச்சி காதல் (love), நெருக்கம் (Intimacy) ஆகியவற்றோடு பிணைக்கப்பட்டுள்ளது என்று பெரும் பாலானோர் நம்புகின்றனர். அது ஓர் யூகமே அன்றி உண்மையல்ல! பெண்களுக்கும் ஆண்களைப் போலவே செக்ஸ் தேவைப் படுகிறது. "பெண் என்றால் மென்மையானவள், அடக்கமானவள்" என்ற சமூகக் கட்டுப் பாடுகளே அறிவியல் ஆராய்ச்சிகளையும் வடிவமைத்துள்ளதால் தான் "பெண்களுக்குக் காதல் தான் தேவை" என்று கூறப்படுகிறது. அறிவியல் ரீதியாக, இரு பாலினங்களுக்கும் காதல் கலந்த உடலுறவு தேவையே!

**"பெண்களுக்குப் பாலியல் ரீதியாக என்ன தேவை? என்ற கேள்விக்கான பதிலைப் பெண்கள் கூறினால் அதனை ஆண்களால் தாங்கிக் கொள்ள முடியுமா?" என்ற கேள்வியை பெர்க்னர் எழுப்பியுள்ளதன் காரணம் பாலின சமத்துவத்தில் 'பாலியலும்' ஓர் அங்கம் என்பதை உறுதிப்படுத்தத் தான்.**

பெண்கள் தங்கள் காம உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதென்பது முடியாத ஒன்றாகவும், மிகவும் அபாயகரமான ஓர் விஷயமாகவும் உள்ளது; ஏனெனில் இந்தப் பாழாய்ப்போன கலாச்சாரத்தால் இது மிகவும் கேவலமான ஒன்றாகக் கருதப்படுகிறது. இதனை ஓர் சான்றுடன் விளக்கலாம். என் தோழி ஏற்பாடு செய்யப்பட்ட திருமணத்தின் முட்டாள் தனமான, அதிமோசமான நிகழ்வான முதல் இரவின் போது தன் கணவனிடம், "எனக்கு மருத்துவரீதியாகவும், சில புத்தகங்களைப் படித்ததன் வாயிலாகவும் பாலியல் பற்றி முழுமையாகத் தெரியும்!" என்று கூறிய அடுத்த நொடியில் "அந்த புத்தகங்களெல்லாம் எப்படி கிடைத்தது? தியரிட்டிக்கலாத்தான் தெரியுமா? இல்ல பிராக்டிக்கல் எக்ஸ்பீரியன்ஸூம் இருக்கா?" என்று சந்தேகத்தோடும், கர்வத் தோடும் அவன் கேட்ட தொடர் கேள்விகளால் திகைத்துப் போனதாகவும், அதன் பின் பாலியலைப் பற்றித் தன் கணவரோடு பேசுவதற்கே அச்சப்படுவதாகவும் கூறினாள்.

ஆனால், உண்மையில், திருமணத்திற்கு முன்பே பிராக்டிக்கல் எக்ஸ்பீரியன்ஸ் பெரும்பாலான ஆண்களுக்கு உண்டு! பாலியலுக்காக ஒரு முறையேனும் பணம் செலுத்தும் ஆண்களின் (திருமணத்திற்கு

முன்போ, பின்போ) எண்ணிக்கையைக் கூறும் ஆய்வு முடிவுகள் இதனை உறுதிப்படுத்துகின்றன. அப்படி இருப்பினும் தான் மணந்து கொள்ளும் பெண், “எனக்குப் பாலியலைப் பற்றி எதுவுமே தெரியாது! என்று வெட்கத்தோடு கூற வேண்டும்; அப்போது தான் அவள் குடும்பப் பெண்!” என்று 21-ஆம் நூற்றாண்டில் கூட ஆண்களின் மூளையில் புரையோடிக் கிடக்கும் இந்த எதிர்பார்ப்பே அந்த சந்தேகத்தை அவர்களுக்கு அளிக்கிறது.

நான் பாலியலைப் பற்றிப் படித் திருக்கிறேன்! என்று ஒரு படித்த பெண்ணால்கூட கூற முடியாத சமூகமே இது! “பெண்களுக்குத் தங்கள் பாலியல் ஆசைகளையும், உணர்ச்சிகளையும் வெளிப்படுத்த அனுமதியில்லாததால், ஆண்களுக்குத் தான் பாலியல் உணர்ச்சிகள் அதிகம் என்ற பொய்யான கூற்று தலைதூக்கிவிட்டது” என்பது தான் உண்மை!

பாலியலைப் பொறுத்த வரை, பெண் பெற்றுக் கொள்பவளாகவே, குறிப்பாக ‘எதையும்’ பெற்றுக் கொள்ளக் கூடியவளாகவே இருக்க வேண்டும் என்ற நிலை இன்றும் சமூகத்தில் உள்ளது. இதனால் தான், குடும்பங்களிலும் பாலியல் வன்முறைகளுக்கு (*Domestic Sexual Violences*) ஆளாகிறாள் பெண்! “பெண்கள் வாழ்வதற்கு வீடு தான் அபாயகரமான இடம் (காரணம்: குடும்ப வன்முறைகள்)” என்ற பி.பி.சி யின் ஆய்வின் முடிவே இதற்கு ஆதாரம். உடலுறவு ஆண், பெண் இருவரின் ஆசைகளையும் உள்ளடக்கியதாக இல்லாமல், ஆண்களே ஆட்சி செய்வதால் தான் இவ்வளவு மோசமான ஓர் ஆய்வு முடிவை நாம் சந்திக்க நேர்ந்துள்ளது.

அறிவியல் ரீதியாக உடலுறவைப் பற்றிய கற்பனை வளமும் (*Creative Sexuality*) ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஒன்றே! ஆண்கள் அதனை வெளிப்படுத்த வேண்டும்; வெளிப்படுத்தினால் தான் ஆண்மைக்கழகு! அக்கற்பனைகளை வெளிப்படுத்த இச்சமூகம் பெண்களைஅனுமதிப்பதில்லை; ஏனெனில் பாலியல் ரீதியாக பலவற்றை அறிந்திருந்தாலும் அதனை மறைத்து வெட்கப்படுவது தான் பெண்மைக்கழகு! என்ற சமூகக் கோட்பாடுகள் தான் ஆண்களைப் பாலியல் வல்லுநர்கள் போல் உயர்த்திப் பிடிக்கிறது! அதற்காக ஆண்களுக்குத் தான் உடலுறவைப் பற்றிய கற்பனை வளம் அதிகம் என்று கூறிவிட முடியாது. அதுவும் இரு பாலினங்களுக்கும் ஒன்றே!

பணியிடங்களிலும், கல்வி நிலையங்களிலும் திறமையானவர்களாகவும், ஆளுமையோடும் இருக்கும் பெண்களையும், குடும்பத்தின் பொருளாதாரத்திற்குப் பெரும் ஆதரவாளர்களாக இருக்கும் பெண்களையுமே பெரும்பாலான ஆண்களால் சகித்துக் கொள்ள முடியாத ஓர் ஆணாதிக்க சமூகத்தில், பல நூற்றாண்டுகளாகத் தங்களுக்கே உரியது என்று ஆண்களால் கொண்டாடப்பட்ட ‘வீரியமான பாலியல் உணர்ச்சிகள், ஆசைகள்’ பெண்களுக்கும் உண்டு என்ற அறிவியல் கூற்றும், உடலியல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் உடலுறவிற்காக ஏங்கும் தன்மை பெண்களுக்கும் இயற்கையாகவே உண்டு என்ற அறிவியல் கூற்றும் பெரும்பாலான ஆண்களால் முற்றிலும் சகித்துக் கொள்ள முடியாதெனினும் இதுவே அறிவியல் உண்மை!

எதிர்ப்பாலின ஈர்ப்புள்ளவர்கள் (*Heterosexual People*) பாலின சமத்துவத்தோடு அனைத்தையும் இருவரும் பகிர்ந்து (பாலியல் ரீதியான விருப்பு வெறுப்புகளையும்) வாழ்ந்தால் தான் அது ஆரோக்யமான உறவாக இருக்க முடியும்! என்கின்றனர் ஆய்வறிஞர்கள்.

“பெண்களுக்குப் பாலியல் ரீதியாக என்ன தேவை? என்ற கேள்விக்கான பதிலைப் பெண்கள் கூறினால் அதனை ஆண்களால் தாங்கிக் கொள்ள முடியுமா?” என்ற கேள்வியை பெர்க்னர் எழுப்பியுள்ளதன் காரணம் பாலின சமத்துவத்தில் ‘பாலியலும்’ ஓர் அங்கம் என்பதை உறுதிப்படுத்தத் தான்.

பாலின பேதமற்ற சமூகத்தை வென் றெடுக்க உழைக்கும் பெரியாரியல் வாதிகளும், பெண்ணிய வாதிகளும் பாலியல் ரீதியாகவும் பாலின சமத்துவத்தை அணுக முன்வர வேண்டும்! பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பாலியல் கல்வியை அமுல்படுத்துவதற்கான முன் முயற்சிகளையும் எடுக்க வேண்டும்! அங்க அமைப்பிலன்றி ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஏற்றத்தாழ்வான வித்தியாசம் எதுவும் இல்லை என்று கூறிய சமூக விஞ்ஞானி பெரியாரின் கூற்றை பாலியல் ரீதியாகவும், இவ்வாய்வின் மூலம் உறுதிபடுத்தி பாலின பேதமற்ற சமூகத்தை வென்றெடுப்போம்!



*- நன்றி : www.countercurrents.org*

# முகநூல் விவாதங்கள்




**வழக்கறிஞர் அருள்மொழி:**

*தாலியும் தமிழர் பண்பாடும்...*

தமிழர் வாழ்வியலில் குறிப்பாகத் திருமண நிகழ்வில் பெண்ணின் கழுத்தில் அணிவிக்கப்படும் தாலி எப்போது இடம் பிடித்தது. ? எட்டாம் நூற்றாண்டிலா ?, பத்தாம் நூற்றாண்டிலா? அதற்கான ஆதாரமாக காண்பிக்கப்படும் இலக்கியம் எது ?

சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள ஆண் குழந்தைகளுக்கான தாலி வகைகளையும் கம்பராமாயணத்திலும் கூறப்பட்டுள்ள ஐம்படைத்தாலியையும் விட்டு விடுவோம். எந்த காலத்தில் பெண்ணின் திருமண அடையாளமாக தாலி அணிவிக்கப்பட்டது என்பது பற்றி கூறமுடியுமா ?

மொட்டை பாப்பாத்தியாய்இருந்தவர்கள் இன்று இல்லையேஏன்?வெள்ளைப்புடவையில் இருந்தவர்கள் இன்று இல்லையே ஏன்? கணவன் இறந்தால் 'முண்டச்சி' என்ற அவப்பெயருடன் இருந்தவர்கள் இன்று மறுமணம் .செய்து கொண்டு சந்தோசமான வாழ்வியலைப் பெற்றார்களே எப்படி ? இதை மாற்றிய பெருமைக்குரியவர்கள் பெரியாரும் திராவிடர் இயக்கமும் தானே!!! தாலிக்காக ஆட்டம் போடும் ஆரிய அடிமைகளே இதை எல்லாம் உங்கள் குடும்பத்துப் பெண்களும் பயன் அடைந்தவர்கள் தானே? சாதி மத சம்பிரதாயங்களையும் விட்டு எப்படி ஏற்றுக்கொண்டீர்கள் பதில் செல்ல முடியுமா எதிர்ப்பாளர்களே ????

**தமிழச்சி** (UN - CIDFF, Feminist):

"என் திருமணம் முடிந்த சில நாட்களி லேயே எனக்கு கட்டப்பட்ட தாலியை கழிப்பறையில் தூக்கிப் போட்டேன். பெண் சமத்துவ மறுப்புக்கு எதிராக என் சுய மரியாதைக்காக மூர்க்கமாய் எனக்குள் இயங்கத் தூண்டியதும் பெரியாரே.

தாலி அணிவதும், எறிவதும் ஒவ்வொரு பெண்ணின் சுயேச்சையான செயல். அதை BJP, H.Raja போன்ற அநாகரீக பிற்போக்குவாதிகள் கலாச்சாரம் என்ற பெயரில் அடக்க முற்படுவார்களானால் எங்களிடமும் (பெண்களிடம்) செருப்புக்கள் உண்டு என்று சொல்வதன் காரணத்தையும் புரிந்து கொள்ள வேண்டும்!"

"தமிழச்சிகள் பத்தினின்னா தாலி கட்டிருக்கனும், அதை கழற்றக் கூடாது"

"தாலி கட்டாத தமிழச்சிகள் அவுசாரிகள்"

"அடுத்தவன் கூட படுப்பதற்காக தாலியை கழற்றி வைத்துவிட்டு ஊர் மேயும் தமிழச்சிகள்"

என்று ஆய்வு செய்யும் தமிழன்களே.... 'தாலி' தமிழர்களின் பண்பாட்டு அடையாளம் என்று யார் சொல்லிக் கொடுத்தார்கள்? முற்போக்குக் கருத்துக்களை ஓர் தமிழச்சி பேசுகிறாள் என்றால், அவளை தரங்கெட்டவள் ரேஞ்சுக்கு நாற அடிக்க நினைக்கும் தமிழன்களே, நீங்கள் கட்டும் ஒவ்வொரு தாலிக் குறியீடும் அவள் உங்களுடைய போகப் பொருளாகவும், சாதிக் குறியீடுகளாகவும், வரதட்சணையோடு விலைக்கு வாங்கப்பட்ட விலைமகளாகவும் வாழ வேண்டிய தேவை தமிழச்சிகளுக்கு ஏன் வாய்க்க வேண்டும்?

தமிழன்களின் சாதிக் குறியீடுதான் தமிழச்சிகளின் தாலி மகிழ்மை என்றால் அது தமிழச்சிகளுக்கு தேவையா? தமிழன்களின் உடைமைப் பொருளாக தமிழச்சிகள் இருக்க வேண்டும் என்றால் அது தமிழச்சிகளுக்குத் தேவையா? இதற்கெல்லாம் 'ஆமாம்' என்று சொல்லும் தமிழன்களின் தரத்தைக் குறித்துக் கேள்வி எழுப்புங்கள். 'தாலி'யை மறுக்கும் தமிழச்சிகளை அவமானப்படுத்தாதீர்கள்!

**இராதிகா சுதாகர்:**

*14 ஏப்ரலில் தி.க. வினர் நிகழ்த்த இருக்கும் தாலி அறுக்கும் நிகழ்வுக்கு என் முழு ஆதரவு.*

தாலி அறுப்பது தமிழினத்தை கொச்சைப்படுத்துதாம்! (நானும் தமிழினம் தான்) பெண்கள் மனதை புண்படுத்துதாம்! (நானும் பெண் தான்) சொல்கிறார்கள் சில ஆண்கள். ஒரு பெண்ணை வைத்துக் கூடச் சொல்ல வழியில்லை இவர்களுக்கு. அந்நிகழ்வை நிறுத்த வேண்டும் என்று காவல்துறையிடம் வேறு புகார். கூடுதலாக, அன்றைய நிகழ்வு நடந்தால் பெரியார் படத்தை எரிப்பார்களாம், அறிவித்திருக்கிறார்கள்.

இவர்களிடம் எந்தத் தமிழ்நாட்டு பெண் கோரிக்கை வைத்தார் என்று தெரியவில்லை. தமிழ்ப்பெண்களின் குரலாம் இவர்களது தாலி மங்கலமாம், அதையும் இவர்களே சொல்லிக்கொள்கிறார்கள். இவர்களின் பினாமி தேசியத்தில் பெண்கள் நாங்கள் பாவம்!

ஆர்.எஸ்.எஸ் செய்ய வேண்டியதை எல்லாம் இவர்களே செய்கிறார்கள். ஆர்.எசு. எசுக்கு மகிழ்ச்சி இரட்டிப்பாகியிருக்கும். அடடே! என்னே ஒரு தெளிவு. என்னே ஒரு தமிழ்த் தேசியம்! இவர்கள் தங்கள் செயற்பாட்டைப், பெண் அடிமை தேசியம் என இனி அறிவித்துக் கொள்ளலாம்!

**செந்தில்நாதன் சேகுவேரா** - தமிழ்தேசியத் தாலி !

தாலி தமிழர் வாழ்வியலின் மரபியல். பண்டைய தமிழினத்தின் ஆணும் பெண்ணும் வெவ்வேறு படிநிலையில் அதை அணிந்து இருக்கிறார்கள் என்பதே வரலாற்று உண்மை. இதை உணர்ந்தே இந்த தமிழ்தேசிய பிள்ளைகள் 'அ' வடிவிலான தாலியை தமிழர் வாழ்வியலின் தொடக்கமாக உணர்ந்து அணிந்து வருகிறோம்.

அ - தமிழ் எழுத்தின் தொடக்கம், தமிழ் மறையின் தொடக்கம், அம்மா-அப்பா இவர்கள் உருவாக்கும் உயிரின் தொடக்கம், தமிழர் வாழ்வியலில் அனைத்திற்கும் தொடக்கமாய் அமைவது போல தமிழரின் வாழ்வியல் தொடக்கம் 'அ' இருந்தே அமையட்டும் என்பதே தமிழ்தேசியத் தாலியின் நோக்கம்.

ஆரியர்கள் சொல்லுவது போல ஒரு தாலிக்கு 9 முகப்புகள் இருப்பதாகவும் அந்த ஒவ்வொரு முகப்பும் ஒரு நம்பிக்கையை பொறுத்து அமைந்திருப்பதாகவும் சொல்லப்படும் மூடநம்பிக்கைகளில் இந்த தமிழ்தேசியத் தாலி அமையாது. இந்த திராவிட பகுத்தறிவு வியாதிகள் சொல்லுவது போன்று இதில் பெண்ணடிமைத்தனமோ, ஆணாதிக்கத்தனமோ எதுவுமே இல்லை. பாட்டுக்கோட்டையாம் பட்டுகோட்டையார் சொன்னது போல..

"போட்டுக்கிட்டா ரெண்டு பேரும்
சேர்ந்து போட்டுக்கனும்- தாலி
போட்டுக்கிட்டா ரெண்டு பேரும்
சேர்ந்து போட்டுக்கனும்-ஒலகம்
புதுசா மாறும்போது,
பழைய மொறையை மாத்திக்கனும்".

ஆரிய - பார்ப்பனன் கொண்டுவந்த தாலியை நீங்கள் புரட்சி செய்து அறுத்தெறிவதில் எங்களுக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. ஆனால் எங்கள் உயிருக்கு நிகரான மொழியின் முன்னெழுத்தான 'அ' எனும் தமிழ்தேசிய தாலியில் மூடநம்பிக்கை இல்லை, பெண்ணடிமை - ஆணாதிக்க வாடை எதுவும் இல்லை. எனவே எங்கள் தமிழ்மண்ணில் அதை-இதை பொய் சொல்லி பிழைப்பு நடத்தும் ஆரியத்திற்கும், ஆரியத்தை சொல்லியே பிழைத்துவரும் திராவிடத்திற்கும் இங்கே வேலையில்லை.

*வீரத்தமிழர் முன்னணி 02-04-2015*

**ஆர்.ஆர். சீனிவாசன், பூவுலகின் நண்பர்கள்**

*தாலியின் சரித்திரம் -*
*பேராசிரியர் முனைவர் தொ.பரமசிவன்*

தாலி என்ற சொல்லின் வேர்ச்சொல்லை இனங்காண முடியவில்லை. ஆனால், தாலி தாலாட்டு ஆகிய சொற்களைக் கொண்டு தால் என்பது தொங்கவிடப்படும் அணி (காதணி, மூக்கணி, விரலணி போல) என்று கொள்ளலாம்.

நமக்குக் கிடைக்கும் தொல்லிலக்கியச் சான்றுகளிலிருந்து (சங்க இலக்கியங்கள் சிலப்பதிகாரம்) அக்காலத்தில் ஆண் பெண்ணுக்குத் தாலி கட்டும் வழக்கம் இருந்ததில்லை என்றே தோன்றுகிறது.

தமிழர் திருமணத்தில் தாலி உண்டா? இல்லையா? என்று தமிழறிஞர்களுக்கு மத்தியில் 1954இல் ஒரு பெரிய விவாதமே நடந்தது. இந்த விவாதத்தைத் தொடங்கி வைத்தவர் கவிஞர் கண்ணதாசன். தாலி தமிழர்களின் தொல் அடையாளம்தான் என வாதிட்ட ஒரே ஒருவர் சிலம்புச்செல்வர் ம.பொ.சி. மட்டுமே.

கி.பி.10ஆம் நூற்றாண்டுவரை தமிழ்நாட்டில் தாலி என்ற பேச்சே கிடையாது என்கிறார் கா. அப்பாத்துரையார். பெரும்புலவர் மதுரை முதலியாரும், தமிழ் ஆய்வறிஞர் மா.இராசமாணிக்கனாரும் பழந் தமிழர்களிடத்தில் மங்கலத்தாலி வழக்கு கிடையாது என உறுதியுடன் எடுத்துக் கூறினர்.

தொல் பழங்குடி மக்கள் பிள்ளைகளைத் தீயவை அணுகாமல் காப்பதற்குப் பிள்ளைகளின் இடுப்பில் அரைஞாண் கயிற்றில் சில பொருள்களைக் கட்டும் வழக்கம் இருந்தது. அவ்வழக்கம் மிக அண்மைக்காலம்வரை கூட நீடித்தது. இவ்வாறு அய்ந்து பொருள்களைப் பிள்ளைகளின் அரைஞாண் கயிற்றில் கட்டுவதை சங்க இலக்கியங்கள் அய்ம்படைத் தாலி என்று குறிப்பிடுகின்றன. மிக அண்மைக்காலம் வரையிலும்கூட கிராமப்புறங்களில் குழந்தைகளின் அரைஞாண் கயிற்றில் நாய், சாவி, தாயத்து ஆகிய உருவங்களைச் செய்து கட்டுவது வழக்கமாயிருந்தது.

நந்தனின் சேரிக்குழந்தைகள் அரைஞாண் கயிற்றில் இரும்பு மணி கட்டியிருந்ததாகக் குறிப்பு பெரியபுராணத்தில் உள்ளது.

எனவே, தாலி என்னும் சொல் கழுத்துத் தாலியைத் தொடக்க காலத்தில் குறிப்பிடவில்லை என்பது தெளிவாகிறது.

கி.பி. 7ஆம் நூற்றாண்டில் திருமணச் சடங்குகளை ஒவ்வொன்றாகப் பாடுகின்ற ஆண்டாளின் பாடல்களில் தாலி பற்றிய பேச்சே கிடையாது. மாறாக, தான் கொன்ற புலியின் பல்லை எடுத்து வீரத்தின் சின்னமாக ஆண் தன் கழுத்தில் கோர்த்துக் கட்டிக் கொண்டால் அதைப் புலிப்பல் தாலி என்று குறிப்பிட்டுள்ளனர்.

புலிப்பல் கோத்த புலம்பு மணித்தாலி (அகநானூறு) புலிப்பல் தாலிப் புன்தலைச் சிறார் (புறநானூறு)

இரும்புலி எயிற்றுத் தாலி இடையிடை மனவுகோத்து (திருத்தொண்டர் புராணம்)

தமிழ்நாட்டில் ஆதிச்சநல்லூர் உள்பட பல்வேறு இடங்களில் தோண்டி எடுக்கப்பட்ட புதை பொருள்களில் இதுவரை தாலி எதுவும் கிடைக்கவில்லை.

தமிழ்நாட்டில் இப்போது பயன்படுத் தப்பட்டுவரும் தாலிகளில் சிறுதாலி, பெருந்தாலி, பஞ்சார(கூடு)த் தாலி, மண்டைத் தாலி, நாணல் தாலி (ஞாழல் தாலி) பார்ப்பாரத் தாலி, பொட்டுத் தாலி ஆகியவை பெருவாரியான மக்களால் பயன்படுத்தப்படுபவை ஆகும்.

ஒரு ஜாதிக்குள்ளேயே அதன் உள்பிரிவுகள் சிறுதாலி, பெருந்தாலி வேறுபாட்டால் அடையாளப்படுத்தப்பட்டன. ஒரு காலத்தில் உணவு சேகரிப்பு நிலையில் வாழ்ந்த சில ஜாதியார் இன்றுவரை கழுத்தில் தாலிக்குப் பதிலாகக் காரைக்கயிறு எனும் கறுப்புக்கயிறு கட்டிக் கொள்கின்றனர். கழுத்தில் காரை எலும்பை ஒட்டிக் கட்டப்படுவதால் அது காரைக்கயிறு எனப் பெயர் பெற்றது. பார்ப்பாரத் தாலியில் ஒரு வகை, பெண்ணின் மார்புகள் போன்ற இரண்டு உருவத்திற்கு நடுவில் ஒரு உலோகப் பொட்டினை வைத்துக் கொள்வதாகும். இது மனித குல வரலாற்றில் ஏதோ ஒரு தொல் பழங்குடியினரின் கண்டுபிடிப்பாக இருக்க வேண்டும்.

கி.பி. 10 ஆம் நூற்றாண்டு முதலே தமிழகத்தில் பெண்ணின் கழுத்துத்தாலி புனிதப் பொருளாகக் கருதப்பட்டு வந்துள்ளதாகக் கொள்ளலாம். அதன் பின்னரே, கோவில்களிலும் பெண் தெய்வங்களுக்குத் தாலி அணிவிக்கப்பட்டது. திருக்கல்யாண விழாக்களும் நடத்தப்பட்டன. நாளடைவில் தாலி மறுப்பு அல்லது நிராகரிப்பு என்பது கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாக மாறிவிட்டது.

இந்தியச் சிந்தனையாளர்களில் தந்தை பெரியார்தான் முதன்முதலில் தாலியை நிராகரித்துப் பேசவும் எழுதவும் தொடங்கினார். அவரது தலைமையில் தாலி இல்லாத் திருமணங்கள் நடைபெறத் தொடங்கின. ஆணுக்குப் பெண் தாலி கட்டும் அதிர்ச்சி மதிப்பீட்டு நிகழ்ச்சிகளும் சில இடங்களில் நடந்தன. பின்னர், 1969 இல் அண்ணா காலத்தில் நிறைவேற்றப்பட்ட சுயமரியாதைத் திருமணச் சட்டம் தாலி இல்லாத் திருமணத்தைச் சட்டபூர்வமாக அங்கீகரித்தது. கடைசியாக ஒரு செய்தி, சங்க இலக்கியங்களில் தாலி மட்டுமல்ல, பெண்ணுக்குரிய மங்கலப் பொருள்களாக இன்று கருதப்படும் மஞ்சள், குங்குமம் ஆகியவையும்கூட பேசப்படவே இல்லை.

தாலிப் பற்றி பேராசிரியர் தொ.பரமசிவன் அவர்களின் கட்டுரை. தாலி தமிழர்களின் அடையாளம் என்று சொல்பவர்களுக்காக. (பண்பாட்டு அசைவுகள், பக்கம்-51-52.)

### ஸ்டாலின் தி

அண்ணலின் பிறந்த நாளில் தி.க வின் திசை திருப்பும் உத்தியான தாலியறுப்பை வி.சி.க ஆதரிக்கிறது என்று வி.சி.க வினர் சொல்ல ஆரம்பித்துவிட்டனர். அண்ணலின் பிறந்த நாளில் அண்ணலைப் பற்றிப் பேசாமல் தாலியறுத்துக்கிட்டு, மாட்ட அறுத்துக்கிட்டுக் கிடங்கடான்னு ஜாதி இந்துக்கள் வழி காட்டுகிறார்கள் .அவ்வழியே செல்வது எவ்வளவு ஆபத்து என்பதை காலம் விளக்கும்.

### Deva Sundara Dhas Ganapathy

ஒரு மாபெரும் தலைவரின் பிறந்த தினம் நினைவு தினங்களை ஒட்டி நடத்தப்படும் போராட்டங்கள் மற்றும் நிகழ்வுகள் அந்தத் தலைவரைக் குறித்த ஒரு பிம்பத்தை பொதுமக்களின் மனங்களில் கட்டமைக்கும். அந்தத் தலைவர் உயிரோடு இல்லாத சூழலில் அந்தக் குறிப்பிட்ட தலைவர் அந்தச் செயல் தனக்கு ஏற்புடையதா என தெளிவுபடுத்தும் சூழல் இருக்காது. இந்தச் சூழலில் அந்தத் தலைவரின் கொள்கைகளோடு மட்டுமல்லாமல் அவரது செயல்படும் முறைகளோடு விவாதத்துக்கு இடமின்றி ஒத்துப்போகும் செயல்பாடுகளோடு அந்தத் தலைவரை தொடர்புப்படுத்திக் காட்டுவதே சரியாக இருக்கும்.

இந்து மதத்தை எதிர்த்த அண்ணல் அதைச் சீர்படுத்துவது தன் வேலை அல்ல என்று தெளிவுபடுத்தி இருக்கிறார். அதே சமயம் அவர் பவுத்தத்தை ஏற்றிருக்கிறார். பவுத்தம் ஏற்றல் என்ற செயல்பாட்டோடு முரண்படுகிற திராவிட

இயக்கம் அண்ணலின் இந்து மத எதிர்ப்பை மட்டும் பிடித்துக் கொண்டு சில போராட்டங் களோடு அவரை தொடர்புப்படுத்துவது சரியெனப் படவில்லை.

ஒரு தலைவரை நாம் மதிக்கலாம். ஆனால் அவரோடு முழுமையாக ஒத்துப்போகாத சூழலில் அவரது அடையாளத்தினை சித்தரிக்கும் வேலைகளில் ஈடுபட முடியாது. அண்ணலோடு பல முரண்பாடுகள் உள்ள திராவிட இயக்கம் அவரது கொள்கை அடையாளத்தை தீர்மானிக்கும் செயல்களில் இருந்து விலகி இருப்பதே நல்லது. எதிர்ப்புகள் வந்த பிறகாவது அதை செய்யலாம்.

ஈ.வே.ரா இந்து மதத்தை எதிர்த்தார். இசுலாத்தை சிலாகித்து இருக்கிறார். அதற்காக செப். 17 இல் 'பெரியார் நினைவு இசுலாமிய பிரச்சார நிகழ்ச்சி' என இசுலாமியர் செய்ய ஆரம்பித்தால் ஏற்பீர்களா?

**Sridhar Kannan**

மாட்டிறச்சியை திண்பதற்கு விழாக்களைக் எடுக்கும் முற்போக்கு சக்திகள் அவர்களின் இல்லங்களுக்கும் மாட்டிறச்சியைக் கொண்டு சென்று சமைத்து சாப்பிட முற்படுவார்களா?

**Jeeva Sagapthan**

இந்தியாவில் மாட்டிறைச்சி உண்ணும் போராட்டத்தை 70 வருடங்களுக்கு முன்னால் அறிவித்து அப்போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தி காட்டியது பெரியார் இயக்கம்தான். அவர்கள் வீட்டிலும் மாட்டிறைச்சி சமைக்க வேண்டும் என்றுதான் பெரியார் சொன்னார். மாட்டிறைச்சி உண்ணும் பழக்கமுடைய ஆதிதிராவிடர்கள், அருந்ததியர்கள் மற்றும் இசுலாமியர்களை சிறைப்படுத்த சட்டம் கொண்டுவர நடுவண் அரசு முயற்சித்து வருகிறது. இந்தச்சூழலில் அந்தப் புனிதத்தை உடைக்கும் வண்ணம், பெரியாரின் தொடர்ச்சியாக இந்நிகழ்வு நடைபெற இருக்கிறது. இதனை விமர்சிப்பது யாருக்குச் சாதகமாக அமையும் என்று சிந்தித்துப் பாருங்கள். பொது எதிரியை தப்பிக்க விடுவதில்தான் பலர் குறியாக இருக்கிறார்கள்

**மகிழ்நன் பா.ம**

அம்பேத்கரை இஸ்லாமிய விரோதி போன்றும், இந்துத்துவவாதி போன்றும் இந்துத்துவக் கும்பல் சித்தரிக்கும் போது குதிக்காதவர்கள்.. பாஜக என்னும் காவிக்கும்பலோடு அம்பேத்கரின் பெயரைக் கொண்டு கட்சி நடத்தும் 'தலித் கட்சிகள்' கூட்டு சேரும் போது பொங்காதவர்கள்...யாரும் மாட்டுகறி உணவை உண்ணக்கூடாது என்று சட்டமியற்ற முனையும் அரசுக்கெதிராக, போலி பண்பாட்டுப் பெருமிதங்களைக்கூறி தலித் மக்களை அணி திரட்டக் களமிறங்கியிருக்கும் காவிப் பரிவாரங்களுக்கு எதிராக ஒரு நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தால் ஏன் கொந்தளிக்க வேண்டும்..?

அம்பேத்கர் பிறந்த நாளில் மாட்டுக்கறி விழா நடத்தினாலோ, தாலி அகற்றும் நிகழ்வை நடத்தினாலோ அம்பேத்கரின் சிந்தனைக்கு எவ்வகையில் முரணானதாகும்?

திராவிட இயக்கங்களின் செயல் பாடுகளில் விமர்சனங்கள் இருந்தால், நட்பு முரண் அடிப்படையில் தெரிவித்து உரையாடுங்கள்...மாற்றம் கொண்டு வர முனையுங்கள்..தோழமைகளை இழப்பது வெற்றியேயன்றி, தோல்வியையே ஈட்டித்தரும்...

## ஐ.நா அவையில் தோழர் பூங்குழலி

கருந்திணைப் பண்பாட்டுக் குடும்பத்தின் அடிப்படையான தோழர் பூங்குழலி அவர்கள், கடந்த 25 மார்ச் 2015 அன்று ஜெனீவாவில் நடைபெற்ற அய். நா. மனித உரிமைகள் குழுவின் 28-ஆவது கூட்டத் தொடரில் பங்கேற்றார். அங்கு நடைபெற்ற பக்க நிகழ்வில் "இலங்கையில் தமிழ்ப் பெண்கள் மற்றும் குழந்தைகளின் நிலை- போருக்குப் பிந்திய காலம்- இலங்கையில் தமிழ்ப் பெண்கள் மற்றும் குழந்தைகளின் உரிமைகள்" என்ற தலைப்பில் உரை யாற்றினார்.

உண்மையாகவே இலங்கையில் போர் நிறைவுப்பெற்று சமாதானம் நிலைநாட்டப் பட்டுள்ளதா? 2009 ம் ஆண்டு போர் நிறைவுக்கு வந்த பின்னர் இலங்கை வாழ் மக்கள் குறிப்பாகத் தமிழ்ப்பெண்கள் பாது காப்பான சூழலில் வாழ்கின்றார்களா? என்னும் இரண்டுவினாக்களை எழுப்பி அவற்றிற்கான விரிவான விளக்கங்களை முன்வைத்து உரையாற்றினார் தோழர் பூங்குழலி. தோழருக்கு காட்டாறு குழுவின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

# குழந்தைகள் பகுதி




## பொது அறிவு வினாக்கள்

1. இந்தியாவின் புகழ் மிக்க இரும்புத் தூண் எங்கு உள்ளது ?
   அ. கல்கத்தா　　ஆ. தில்லி
   இ. சென்னை　　ஈ. மும்பை

2. 'நிமோனியா ' என்ற நோய் உடலின் எந்த பகுதியைத் தாக்கும் ?
   அ. கல்லீரல்　　ஆ. நுரையீரல்
   இ. கண்கள்　　ஈ. கிட்னி

3. எந்த ஆஸ்திரேலிய விலங்கு, பறவை, பாலூட்டி மற்றும் மீனின் சில குணங்களை ஒருங்கே கொண்டது ?
   அ. கோலா　　ஆ. ப்ளாடிபஸ்
   இ. ட்ரெளட்　　ஈ. வொம்பாட்



4. பஞ்சாபின் மிகப் பிரபலமான நாட்டுப்புற நடனம் எது ?
   அ. கார்பா　　ஆ. பாங்கரா
   இ. ஜிம்மர்　　ஈ. சபர்

5. பாண்டா கரடி எதனை விரும்பி உண்ணும் ?
   அ. எறும்பு　　ஆ. மூங்கில்த் தண்டு
   இ. ஆப்பிள் விதை　　ஈ. நாய்

6. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் கிரகிப்புத் தன்மை இல்லாதது எது ?
   அ. பிளாஸ்டிக்　　ஆ. கிராஃபைட்
   இ. சில்வர்　　ஈ. அலுமினியம்

7. செயற்கைக் கோள் தொலைக்காட்சி சேனலான HBO என்பதன் விரிவாக்கம் என்ன ?
   அ. ஹாலிவுட் பாக்ஸ் ஆஃபிஸ்　　ஆ. ஹைலேண்ட் ப்ளூ ஆஃபிஸ்
   இ. ஹோம் பாக்ஸ் ஆஃபிஸ்　　ஈ. ஹோம் பேங்க் ஆர்கனைசேக்ஷன்

8. LAN என்பதன் விரிவாக்கம் என்ன ?
   அ. லீவ் ஆல் நெட்வொர்க்　　ஆ. லேடிஸ் அஸெஸிங் நெட்
   இ. லோக்கல் ஏரியா நெட்வொர்க்　　ஈ. லீவ் அவைலபிள் நம்பர்

9. கீழே கொடுக்கப்பட்டுள்ள எந்த நாடு தங்கம் எடுக்கும் பணியில் முதலிடம் வகிக்கிறது ?
   அ. இந்தியா　　ஆ. ஜப்பான்
   இ. தென் ஆப்பிரிக்கா　　ஈ. ஃப்ரான்ஸ்

10. கர்லிங் என்ற விளையாட்டு எந்த வகையான நில அமைப்பில் விளையாடப்படுகிறது ?
   அ. ஐஸ்　　ஆ. க்ளே
   இ. ஸ்டீல்　　ஈ. க்ரானைட்.

விடைகளை 15 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மட்டும் அஞ்சலட்டையில் எழுதி அனுப்பவும். அனுப்பவேண்டிய முகவரி: காட்டாறு, 1/810 முத்தமிழ்நகர், நத்தம் சாலை, திண்டுக்கல் - 624003.

# பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு மிகவும் அவசியம் - தோழர் அம்பேத்கர்



"

இந்த நாட்டில்,பிற்படுத்தப்பட்டவர்கள்,ஒடுக்கப்பட்ட சாதியினராக இந்து மதத்தால் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். எனவே, இந்து மதத்தின் பன்னெடுங்கால கொடுமைக்கு ஓர் இடைக்காலத்தீர்வாக,பிற்படுத்தப் பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு மூலம் சில உரிமைகள் வழங்குவது மிகவும் அவசியமாகிறது.

"

அரசமைப்புச் சட்டத்தின் 15 வது பிரிவில் புதிய இணைப்பு (திருத்தம்) தேவை என்ற சூழல் உருவாகியுள்ளது. இந்த விரும்பத்தகாத சூழலுக்கு மூலகாரணம், நீதிமன்றம் வழங்கியுள்ள இரண்டு தீர்ப்புகள்தான். இந்தத் தீர்ப்பை வழங்கியது, சென்னை உயர்நீதிமன்றம்.

1. சென்னை (எதிர்) திருமதி.செண்பகம் துரைராஜன் 2. வெங்கட்ராமன் (எதிர்) சென்னை அரசு. இந்த இருவரின் வழக்குகளால், அரசு மற்றும் அரசு சார்ந்த துறைகளில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்கக் கூடாது என்ற நிலை உருவாகியுள்ளது.

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அரசுப்பணிகளிலும் கல்வி நிறுவனங்களிலும் இட ஒதுக்கீடு அளிக்கக் கூடாது என்ற கருத்தை மய்யமாகக் கொண்டு நீதி மன்றம் தன்னுடைய தீர்ப்பை வழங்கியுள்ளது. இதன் விளைவாக, சாதி ரீதியான அரசாணை (Communal G.O) உருவானது. இந்த அரசாணை செல்லாது என்று சட்ட வல்லுனர்களும், நமது மேதகு நாடாளுமன்ற அங்கத்தினர்களும் கூக்குரலிடுகின்றனர்.

அரசியல் அமைப்புச் சட்டம் 16(4) பிரிவு, மாநில அரசுகள் தங்கள் விருப்பப்படி அல்லது எழுந்துள்ள தேவைகளின் அடிப்படையில் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் சிறப்பு ஒதுக்கீடு வழங்கும் அதிகாரத்தை முழுவதுமாக வழங்குகிறது. இந்த 16(4) பிரிவு, அரசமைப்புச் சட்டத்தின் 29 ம் பிரிவுடன் முரண்படுவதால், பிற்படுத்தப் பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு தரக்கூடாது என்று உச்ச நீதிமன்றம் கருதுகிறது.

மேலும், 'சாதியின் அடிப்படையில் இட ஒதுக்கீடு வழங்குவது கூடாது; அது முற்பட்டவர்கள் மற்றும் பிற்படுத்தப் பட்டவர்களிடையே பாரபட்சத்தைத் தோற்றுவித்துவிடும்' என்று உச்ச நீதிமன்றம் தன்னுடைய தீர்ப்பில் தெரிவித்துள்ளது. நான், உச்ச நீதிமன்றத்தின் இரண்டு தீர்ப்புகளையும் கூர்ந்து படித்தேன். இந்த இரண்டு தீர்ப்புகளும் மிகுந்த அதிருப்தியைத் தருகிறது.

இந்தத் தீர்ப்புகள், நமது அரசியல் சாசனத்தின் பிரிவுகளோடு ஒத்துப்போகவில்லை. இது, என்னுடைய வாதம். உச்சநீதிமன்றத்தின் இத்தகைய தீர்ப்புகளுக்காக நான் வருந்துகிறேன். (நாடாளுமன்றத்தில் கூச்சல் குழப்பம். சபாநாயகர் இடைமறித்து, அம்பேத்கர் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்கிறார். ஆனால், அம்பேத்கர் அதைப் பொருட்படுத்தவில்லை)

அரசியல் சட்டப் பிரிவு 29(2) இல், 'மட்டும்' என்ற வார்த்தையைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் வழங்கப்பட்ட தீர்ப்பாகவே இவற்றை நான் கருதுகிறேன். மதம், இனம் அல்லது ஆண், பெண் பேதம் ஆகியவற்றை 'மட்டும்' அடிப்படையாகக் கொள்ளக் கூடாது. இது 29(2) இன் பொருள். இங்கு 'மட்டும்' என்ற வார்த்தை மிகவும் முக்கியப் பங்கு வகிக்கிறது. இதை உச்சநீதிமன்ற நீதிபதிகள் கவனிக்கவில்லை என்பது என்னுடைய வாதம்.

'சாதியற்ற இந்துக்கள்' என்று இந்நாட்டில் எவரும் இல்லை. ஒவ்வொரு இந்துவுக்கும் சாதி உண்டு. பார்ப்பனர், மகராட்டா, குன்பி, கும்பார் அல்லது ஒரு தச்சன் இவர்களில் யாரும் சாதியை விட்டு வாழும் இந்துவாக இல்லை.

இந்த நாட்டில், பிற்படுத்தப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்ட சாதியினராக இந்து மதத்தால் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். எனவே, இந்து மதத்தின் பன்னெடுங்கால கொடுமைக்கு ஓர் இடைக்காலத்தீர்வாக, பிற்படுத்தப்பட்டவர் களுக்கு இடஒதுக்கீடு மூலம் சில உரிமைகள் வழங்குவது மிகவும் அவசியமாகிறது. இதைக் கருத்தில் கொள்ளும் போது, நமது உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு ஓர் அதிருப்தியான தீர்ப்பாகும்.

நான், உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளுக்குக் கட்டுப்பட்டவனாக வேண்டுமானால் இருக்கலாம். ஆனால், அதே நேரத்தில் அந்தத் தீர்ப்பை மதிக்க வேண்டும் என்ற கட்டாயம் எனக்கு இல்லை. இது, ஒவ்வொரு தனி மனிதனுக்கும் உள்ள சுயேச்சையான உரிமை. இதை விட்டு விட நான் தயாராக இல்லை. இதுவே என்னுடைய அழுத்தமான முடிவாகும். மேலும், அரசமைப்புச் சட்டத்தின் 46 வது பிரிவு, பிற்படுத்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான அனைத்து வகையான நலன்களை உறுதிப்படுத்தவும் மேம்படுத்தவும் மாநில அரசுகளுக்குப் போதிய அதிகாரத்தை நிர்ணயித்துள்ளது.

இந்த அதிகாரத்தை உறுதிப்படுத்த வேண்டிய தேவை, நாடாளுமன்றத்திற்கு எழுந்துள்ளது. நாடாளுமன்றம் 16(4) மற்றும் 29 ஆகிய பிரிவுகளை விரிவாகப் புரிந்து கொள்ளும் வகையில் பிரிவு 15 போதிய விளக்க இணைப்பு (சட்டத் திருத்தம்) சேர்க்கப்பட வேண்டும். இது, ஒடுக்கப்பட்ட மக்களின் உண்மையான உயர்வை சட்டப்பூர்வமாக அங்கீகரிக்க உதவும்.

பாபா சாகேப் டாக்டர் அம்பேத்கர்
ஆங்கில நூல் தொகுப்பு' : 15 பக்கம் : 331

# ஆணாதிக்கக் கொம்பன்




குட்டிப்புலி இயக்குநர் முத்தையா இயக்கிய மற்றுமொரு ஜாதிவெறித் திரைப்படம் கொம்பன். சென்சாரில் 72 இடங்களில் வெட்டுப்பட்ட கொம்பன் தனது உண்மைத்தன்மையை இழந்து வெளியிடப்பட்டுள்ளது. ஆனால் அப்படி குண்டாங்குறையாக வெட்டுப்பட்டு வந்திருக்கும் கொம்பனே மிகவும் ஆபத்தானவன்தான். முத்தையா இயக்கிய குட்டிப்புலி மிகவும் வெளிப்படையாக தேவர் ஜாதிவெறியை விதைத்துச்சென்றது. கதாநாயகனின் எதிரியாக வருபவர் வாழும் பகுதியைக் குறிப்பிடும் பொழுது தாழ்த்தப்பட்டவர் வாழும் பகுதியாகப் புரிந்துகொள்ளும் வண்ணம் வெளிப் படையாகவே அடையாளப் படுத்தப்பட்டு குட்டிப்புலி வெளியானது.

குட்டிப்புலி மட்டுமல்ல, விருமாண்டி, மதயானைக்கூட்டம், சுந்தரபாண்டியன், திலகர், சுப்பிரமணியபுரம் போன்ற பலபடங்கள் தேவர் ஜாதிவெறியை வளர்த்து விடவே செய்தன. பொதுவாக மதுரை மற்றும் தென் மாவட்டங்களை மய்யமாகக் கொண்ட படங்கள் என்றாலே வெட்டுக்குத்து, கொலைகள், ஜாதித்திமிர், ஆணாதிக்கத்திமிர், பணத்திமிர் என ஒழிக்கப்படவேண்டிய அனைத்துத் தன்மைகளையும் உள்ளடக்கமாகக் கொண்ட படங்களாகவே வெளிவருகின்றன. , இப்பகுதி மக்களிடம் மட்டுமல்ல, இந்தியாவின் அனைத்துப்பகுதி மக்களிடமும் இயல்பாக இப்படிப்பட்ட தன்மைகள் இருக்கின்றன. ஆனால் தென்மாவட்ட மக்களை மட்டும் தொடர்ந்து காட்டுமிராண்டிகளாகச் சித்தரிப்பதும், படங்களில் வருவது போலவே கடந்த மூன்று மாதங்களில் 80 கொலைகள் நடப்பதும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாகும்.

நகைகள், உடைகள், முடிவெட்டுக்கள் என பலவற்றிலும் சினிமா கதாநாயக, கதாநாயகிகளைப் பின்பற்றும் சாதாரண சமூகம் இது. நாடக, சினிமா கதாநாயகர்களை முதல்வர்களாக உயர்த்திப்பார்க்கும் சமுதாயம் இது. இப்படிப்பட்ட சமுதாயத்தில் உள்ள சக்திவாய்ந்த ஊடகமான திரைத்துறையில் திரைப்படத்தை இயக்க வருபவர்களுக்கும், தயாரிப்பவர்களுக்கும் சிறிதளவாவது சமுதாயப்பொறுப்பு இருக்கவேண்டும்.

கொம்பனோ, குட்டிப்புலியோ எந்த ஜாதியையும் குறிப்பிட்டு எடுக்கவில்லை என்று படக்குழுவினர் கூறினாலும், இதுபோன்ற படங்களில் காட்டப்படும் கொலைசெய்யும் முறைகள், சவால்விடும் முறைகள், வம்பிழுக்கும் முறைகள், சண்டையிடும் முறைகள் என அனைத்தும் இங்கு பல கொலைகளைத் தூண்டிவிடவே செய்கின்றன. இயல்பாக ஜாதிய மோதல்கள் அதிகமாக இருக்கும் பகுதிகளில் இவை கூடுதலாக வன்முறையை வளர்க்கின்றன.

தென்மாவட்டங்களில் அனைத்து ஜாதியிலுமே வெட்டுக்குத்துக்களை இயல்பாக எடுத்துக்கொள்ளும் போக்குக் கொண்டவர்கள் இருக்கிறார்கள். மாற்று ஜாதிக்காரரைக் கொல்வதே வீரம் என்ற எண்ணத்தில் வாழ்பவர்கள் இருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்களை தொடர்ந்து காட்டு மிராண்டிகளாகவே வைத்திருக்கவே இது போன்ற படங்கள் பயன்படும்.

டாக்டர் கிருஷ்ணசாமியின் எதிர்ப்பால் சென்சாரின் வெட்டுக்களால், வெளிப்படையாக எந்த ஜாதியையும் இப்படம் குறிப்பிட முடியவில்லை என்றாலும், படத்தில் வரும் குலதெய்வ வழிபாடுகள், காட்டப்படும் பண்பாடுகளை வைத்து கதாநாயகன் முக்குலத்தோரை அடையாளப்படுத்துகிறான் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஜாதிவெறியை வளர்ப்பதைக் கண்டிக்கும் இதேநேரத்தில் கொம்பன் வெளிப்படுத்தும் ஆணாதிக்க வெறிக்காக நாம் அனைவரும் இப்படத்தைப் புறக்கணிக்கவேண்டும்.

“பொம்பளைன்னா வீட்ல அரிசி இல்ல, பருப்பு இல்ல, காய்கறி இல்லன்னுதான் கேக்கனும். புருசன் எங்க போறான்? என்ன செய்றான்னு கேக்கக்கூடாது.“

“வெளிவிசயங்களைக் கேட்டேன்னு வச்சுக்க, வீட்டு விசயம் வெளியில வந்திரும்”

என கதாநாயகன், கதாநாயகியை அடிக்கடி

மிரட்டுகிறான். மீறி கதாநாயகி கணவனைக் கேள்வி கேட்கிறாள். அதனால் கணவனால் அடித்து விரட்டப்படுகிறாள். பிறகு கணவனின் பெருந்தன்மையால் மீண்டும் வீட்டிற்கு அழைத்து வரப்படுகிறாள்.

கதாநாயகனின் மிரட்டலோ, பெருந்தன்மையோ இரண்டுமே, ஆண்தான் உயர்ந்தவன், பெண் அவனுக்கு அடங்கி வாழவேண்டியவள் என்பதை மிகவும் அழுத்தமாகப் பதியவைக்கிறது. ஜாதி வெறியையும், ஆணாதிக்க வெறியையும் அப்பட்டமாகப் பரப்பும் கொம்பனை சமுதாய வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்கள் அனைவரும் அவசியம் கண்டிக்கவேண்டும்.

படம் வெளிவருவதற்கு முன்பு பெரும்பாலான படங்கள் எதிர்ப்பைச் சந்திக்கின்றன. ஊடகங்களின் பரபரப்பு அடங்கியதும் நாமும் இதுபோன்ற படங்களைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிடுகிறோம். கொம்பனை அப்படி விட்டுவிடக்கூடாது. படத்தின் இயக்குநர், தயாரிப்பாளர், கதாநாயகன், விநியோகிப்பாளர்கள் என படத்தின் முக்கிய நபர்கள் அனைவருக்கும் நேரடியாகவோ, மடல் வழியாகவோ, கண்டனக்கூட்டங்களின் வாயிலாகவோ நமது எதிர்ப்புகளைப் பதிவுசெய்ய வேண்டும்.

ஒரு படத்தில் ஒரு நடிகரால் அல்லது இயக்குநரால் சிக்கல் என்றால், அந்த நபருக்கு எதிராகத் திரைத்துறையில் ரெட் கார்ட் போடுவது வழக்கம். இப்படிப்பட்ட படங்களில் நடித்தால், தயாரித்தால், இயக்கினால் ரெட் கார்ட் போடுவதைப் போன்ற ஒருநிலையை முற்போக்காளர்கள் உருவாக்கவேண்டும். அதேசமயம் தென்மாவட்டங்களில் ஜாதி, மத, ஆணாதிக்க வெறிகளுக்கு எதிராகத் தொடர்ந்து பரப்புரைகளை மேற்கொள்ள வேண்டும்.

# அன்னை மணியம்மையார் மென்பொருள்

"இந்த மென்பொருள் அன்னை மணியம்மையார் என்றோர் தைரியமான பெண் தலைவரின் வாழ்க்கை வரலாற்றையும், அவரைப் பற்றி பெரியார் மற்றும் சிலர் எழுதிய கட்டுரைகளையும் அறிந்து கொள்ள உதவும்.

சமூகப் புரட்சியாளர் தந்தை பெரியார் நீண்ட நாட்கள் வாழ்வதற்குக் காரணமாக இருந்த அன்னை மணியம்மையார், பெரியாரின் மறைவிற்குப் பின் அவர் கண்ட இயக்கமான திராவிடர் கழகத்திற்குத் தலைவராக இருந்து வழிநடத்தினார். அவரது தலைமையின் போது இராவண லீலா என்னும் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வை நடத்தினார். மேலும் பல போராட்டங்களில் ஈடுபட்ட வீரமங்கை ஆவார்."

என்ற முன்னுரையுடன் அன்னை மணியம்மையார் பற்றிய விளக்கமான தகவல்கள் அடங்கிய மொபைல் அப்ளிகேசன் ஒன்று விண்டோஸ் செல்பேசிகளில் வெளியிடப்பட்டது. இந்த அப்ளிகேசனை உருவாக்கியவர் தோழர் யாழ்மொழி தற்போது ஆன்ட்ராய்டில் இயங்கும் அனைத்து செல்பேசிகளிலும் இந்த மென்பொருள் வெளியிடப்பட்டுள்ளது.

1920 இல் தொடங்கி மணியம்மையாரின் இறுதிக்காலம் வரை அவரது வாழ்க்கை வரலாறு, அன்னை பற்றி பெரியார், அன்னை பற்றி பாரதிதாசன், புறநானூற்றுத்தாய், அன்னையின் இயக்கக் கடமைகள், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் உரிமைக்கான போராட்டங்கள், தனித்தமிழ் நாட்டின் தேசிய விழா இராவணலீலா, மண்ணின் மைந்தருக்கே 80 சதம் வேலைவாய்ப்புகள் போன்ற போராட்டச் செய்திகள், சொற்பொழிவுகள், அறிக்கைகள் என மணியம்மையார் பற்றிய ஏராளமான தகவல்களை ஆப்ஸ் தலைமுறையினர் எளிதில் அறிந்துகொள்ளும் வண்ணம் இந்த மென்பொருள் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மிகுந்த சிரமங்களுக்கிடையே தனது முக்கியக்கடமையாக எண்ணி இந்த மென்பொருளைத் தயாரித்து வெளியிட்டிருக்கும் தோழர் யாழ்மொழியைப் பாராட்டுகிறோம். தொடர்ச்சியாக பெரியாரின் போராட்டங்களையும் திராவிடர் பண்பாட்டு நடவடிக்கைகளையும் அடுத்த தலைமுறையினர் அறிந்து கொள்ள இதுபோன்ற ஏராளமான மென்பொருள்களை உருவாக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் முன்வைத்து வாழ்த்துகிறோம்.

ஆன்ட்ராய்ட் மற்றும் விண்டோஸ் செல்பேசிகளில் *Annai Maniammai* என்று தேடினால் இலவசமாக இந்த மென்பொருளைத் தரவிறக்கலாம்.

அதி அசுரன்

# தாலி இந்துப் பண்பாடும் அல்ல தமிழர் பண்பாடும் அல்ல

மகளிர் நாள் அன்று புதியதலைமுறை தொலைக்காட்சி, தாலி குறித்து அறிவித்த ஒரு விவாதத்தை எதிர்த்து இந்து அமைப்புகள் கடுமையான எதிர்வினையாற்றின. தாலி பற்றிய விவாதமே நடந்து விடக்கூடாது என்ற எண்ணத்தில் இந்து மத அமைப்புகள் திட்டமிட்டுத் தாக்குதல்களை நடத்தின. ஆனால் அவர்களது திட்டத்தைத் தவிடுபொடியாக்கி ஒரு தொலைக்காட்சியில் மட்டுமல்லாமல், மார்ச் 8 லிருந்து ஏப்ரல் மாதம் முடியும் வரை தாலி பற்றிய விவாதங்கள் தொடர்ச்சியாக தொலைக் காட்சிகளிலும், செய்தி ஊடகங்களிலும், சமூக ஊடகங்களிலும் பரபரப்பாக நடந்து வருகின்றன. அண்மைக்காலத்தில் இந்து அமைப்புகள் சந்தித்த பெரும்தோல்வியான நிகழ்வு என்றால் அது இந்த தாலி குறித்த விவாதம்தான்.

திராவிடர் கழகம், சுயமரியாதை கலை பண்பாட்டுக்கழகம் ஆகிய அமைப்புகள் முறையே ஏப்ரல் 14, 17 தேதிகளில் தாலி அகற்றும் நிகழ்வுகளையும், மாட்டிறைச்சி விருந்துகளையும் நடத்தத் திட்டமிட்டுள்ளன. நீண்ட இடைவெளிக்குப்பிறகு பண்பாட்டுத்தளத்தில் நேரடியாக ஆரிய திராவிடப் போர் ஒன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தாலி அகற்றம் என்பது கடந்த 80 அண்டுகளாக திராவிடர்கழக மேடைகளில் மிகச்சாதாரணமாக பட்டிதொட்டி எங்கும் நடைபெற்று வந்த நிகழ்வுதான். தமிழ்நாட்டில் 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் அவர்களது வாழ்வில் என்றாவது ஒருநாள் தாலி மறுப்புத் திருமணத்தை அவசியம் பார்த்திருப்பார்கள்.. பங்கேற்றிருப்பார்கள். தமிழ்நாட்டில் இது இயல்பான ஒரு நிகழ்வு. இளந்தலைமுறையினருக்கு தாலி பற்றிய பெரியாரது பார்வையை விளக்கும் நோக்கில் சில செய்திகள்.

**தாலி – இந்துக்களின் பண்பாடா?**

இந்துமத சாஸ்திரங்களிலோ, ஆரியவேதங்களிலோ தாலி பற்றிய எவ்விதக் குறிப்புகளும் கிடையாது. இந்திய அரசியல் சட்டத்தில் இடம்பெற்றுள்ள இந்துத் திருமணச் சட்டத்திலும் தாலி பற்றியோ, தாலி இந்துக்களின் பண்பாடு என்பது பற்றியோ எந்தக் குறிப்புகளும், விதிகளும் கிடையாது. இந்துத் திருமண மந்திரங்களிலும் தாலி கட்டுவதற்கென்று எந்த மந்திரமும் கிடையாது. வடஇந்தியாவிலும் இந்து மக்களிடையே தாலி கட்டுவது முக்கியப் பண்பாடாகவும் இல்லை. இந்து மக்களிடையே மிகவும் பிற்காலத்தில் புகுந்ததுதான் இந்தத் தாலி. விளக்கமாகக் காண்போம்.

ரிக்வேதத்தில் காணப்படும் ஒரு திருமணத்தின் மந்திர பாகத்தை எடுத்து 'ஆபஸ்தம்பர்' என்பவர் திருமண மந்திரங்களையும் சடங்குகளையும் வரிசைப்படுத்தி எழுதினார். அதன்பெயர் "கிருஹ்ய சூத்ரம்". அந்தத் திருமண மந்திரங்களுக்கு உரை எழுதி ஒரு நூல் வெளியிடப்பட்டது. அதன்பெயர் 'விவாஹ மந்த்ரார்த்தங்கள்'. இந்நூல் காஞ்சி காமகோடி மடத்தால் வெளியிடப்பட்டது. காமகோடி மட வெளியீடு மட்டுமல்ல; 'மந்த்ர ப்ரச்னம்' என்ற கடலங்குடி பப்ளிகேஷன் வெளியிட்ட நூலும் இதை அப்படியே உறுதி செய்கிறது. காமகோடி மடம் வெளியிட்ட 'விவாஹ மந்த்ரார்த்தங்கள்' என்ற நூலில் உள்ள பகுதியை இங்கே காண்போம்:

## தாலி கட்டாமல் வாழ்ந்த சீதை தான் இந்தியாவில் கற்புக்கே அரசியாகவும் – குடும்பக் குத்துவிளக்குக்கான அடையாளமாகவும் சித்தரிக்கப்படுகிறார்.

"இந்தப் பாணிக்கிரகணத்துக்கு முன்னால் வெகு நாளைய சம்பிரதாயப்படி மாங்கல்ய தாரணம் என்ற சுபகர்மம் அனுஷ்டிக்கப்படுகிறது. மாங்கல்ய தாரணத்துக்கான வேத மந்திரம் ஒன்றும் இல்லாதபடியால் சூத்ரகாரர் அதைப்பற்றி இங்கே சொல்லவில்லை என்றே நாம் நினைக்க வேண்டி இருக்கிறது". (பக்கம் 86; 'விவாஹ மந்த்ரார்த்தங்கள்')

"இதுவே பாணிக்கிரஹணம் என்றதாலும் குறிக்கப்படுகின்றது. இந்தப் பாணிக் கிரஹணத்திற்கு முன்னால் 'மாங்கல்ய தாரணம்' என்றதொரு காரியம் நமது சம்பிரதாயத்தில் நடைபெறுகிறது. சாஸ்திரப் பயிற்சி அற்றவர்கள் அதையே பிரதான கார்யமாகக் கருதி லக்னம் முதலியன தவறாவண்ணம் மிக்க ஜாக்கிரதையுடன் நடத்தி வருகின்றனர் என்பது உண்மையே. ஆயினும் கிருஹ்ய சூத்திரங்களிலோ, மந்திரங்களிலோ இவ்விஷயத்தைப் பற்றிக் கொஞ்சமேனும் கூறவில்லை. பாணிக்கிரஹணம், சப்தபதி முதலியனவே பிரதானமாய் உபதேசிக்கப்பட்டிருக்கின்றன. இக்கார்யங் களுள் ஒன்றான பாணிக்கிரஹத்தைத் தான் நல்ல லக்னத்தில் தவறா வண்ணம் நடத்த வேண்டும் என்று சாஸ்திர மூலம் வெளியாகின்றது." - மந்த்ரப்ப்ரச்னம் - தமிழுரையுடன் - பக்கம் 34, 35)

இந்துவேத முறைப்படி செய்யும் திருமணச் சடங்குகளில் தாலி கட்டும் சடங்கே இல்லை என்று மேற்கண்ட நூல்களில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்து மத வேத மந்திரங்களிலோ, வேத மந்திரங்களின் அடிப்படையில் திருமணச் சடங்குகளைத் தொகுத்த கிருஹ்ய சூத்திரத்திலோ தாலி கட்டும் பேச்சோ, அதற்குரிய மந்திரமோ இல்லை. இதனால்தான் பிராம்மண புரோகிதர்களிடையே மாங்கல்யம் கட்டும் போது ஒரே வகையான சுலோகம் பின்பற்றப்படாமல் ஒருவர் 'மாங்கல்யம் தந்து நானே' என்றும், ஒருவர் 'சர்வ மங்கள மாங்கல்யே' என்றும் மாறி மாறி ஓதுகிறார்கள். வேத மந்திரம் என்று ஒன்று இருக்குமானால் அதையே எல்லோரும் ஒரே மாதிரி ஓதும் வழக்கம் வந்திருக்கும்.

இந்திய அரசியல் சட்டத்திலுள்ள இந்துத் திருமணச்சட்டத்திலும் 'சப்தபதி' என்னும் சடங்குதான் கூறப்படுகிறதே ஒழிய தாலி பற்றி எங்கும் குறிப்புகளோ, விதிகளோ இல்லை. ஆக, தாலி என்பது சட்டப்படியோ, இந்துமத சாஸ்திரப் படியோ, இந்துமதவிதிகளின் படியோ இந்துக்களின் பண்பாடு அல்ல என்பது தெளிவாகின்றது.

இந்து அமைப்புகளின் கதாநாயகனான இராமனின் திருமணத்தில்கூட சீதைக்குத் தாலி கட்டப்படவே இல்லை. வால்மீகி இராமாயணத் திலோ, அதன் தமிழ் டப்பிங் ஆன கம்ப ராமாயணத்திலோ சீதைக்கு தாலி கட்டப்பட்டதாக எந்தக் குறிப்பும் கிடையாது. தாலி கட்டாமல் வாழ்ந்த சீதை தான் இந்தியாவில் கற்புக்கே அரசியாகவும் - குடும்பக் குத்துவிளக்குக்கான அடையாளமாகவும் சித்தரிக்கப்படுகிறார். இன்று வடமாநிலங்களில் பெரும்பாலான இந்துப்பெண்கள் தாலி கட்டாமல் வாழ்வது இதன் தொடர்ச்சிதான்.

இடைக்காலத்தில் சில பார்ப்பனர்களால் புகுத்தப்பட்ட தாலிக்காக - தான் நம்பிக்கை வைத்துள்ள இந்துமதத் தத்துவங்களையோ, வேதங்களையோ, பண்பாடுகளையோகூட சிறிதும் அறிந்து கொள்ளாமல், அரைவேக்காடுகளாக, போராட்டக்களத்திற்கு வருவது நியாயமற்றதும், சமுதாய விரோத, சட்டவிரோதமானதுமாகும்.

### தாலி – தமிழர்களின் பண்பாடா?

தாலியின் சரித்திரம் என்ற தலைப்பில் ஆய்வறிஞர் பேராசிரியர் முனைவர் தொ.பரமசிவன் அவர்கள் உண்மை ஏட்டில் எழுதியுள்ள கட்டுரையிலிருந்து:

"கி.பி.10ஆம் நூற்றாண்டுவரை தமிழ்நாட்டில் தாலி என்ற பேச்சே கிடையாது என்கிறார் கா. அப்பாத்துரையார். பெரும்புலவர் மதுரை முதலியாரும், தமிழ் ஆய்வறிஞர் மா.இராசமாணிக்கனாரும் பழந் தமிழர்களிடத்தில் மங்கலத்தாலி வழக்கு கிடையாது என உறுதியுடன் எடுத்துக்கூறினர்.

தொல் பழங்குடி மக்கள் பிள்ளைகளைத் தீயவை அணுகாமல் காப்பதற்குப் பிள்ளைகளின் இடுப்பில் அரைஞாண் கயிற்றில் சில பொருள்களைக் கட்டும் வழக்கம் இருந்தது. அவ்வழக்கம் மிக அண்மைக் காலம்வரை கூட நீடித்தது. இவ்வாறு அய்ந்து பொருள்களைப் பிள்ளைகளின் அரைஞாண் கயிற்றில் கட்டுவதை சங்க இலக்கியங்கள் அய்ம்படைத் தாலி என்று குறிப்பிடுகின்றன. மிக அண்மைக்காலம் வரை யிலும்கூட கிராமப்புறங்களில் குழந்தைகளின் அரைஞாண் கயிற்றில் நாய், சாவி, தாயத்து ஆகிய உருவங்களைச் செய்து கட்டுவது வழக்கமாயி ருந்தது.

**இந்து மத வேத மந்திரங்களிலோ, வேத மந்திரங்களின் அடிப்படையில் திருமணச் சடங்குகளைத் தொகுத்த கிருஹ்ய சூத்திரத்திலோ தாலி கட்டும் பேச்சோ, அதற்குரிய மந்திரமோ இல்லை.**

நந்தனின் சேரிக்குழந்தைகள் அரைஞாண் கயிற்றில் இரும்பு மணி கட்டியிருந்ததாகக் குறிப்பு பெரிய புராணத்தில் உள்ளது. எனவே, தாலி என்னும் சொல் கழுத்துத்தாலியைத் தொடக்க காலத்தில் குறிப்பிடவில்லை என்பது தெளிவாகிறது.

சங்க இலக்கியங்களில் தாலி மட்டுமல்ல, பெண்ணுக்குரிய மங்கலப் பொருள்களாக இன்று கருதப்படும் மஞ்சள், குங்குமம் ஆகியவையும்கூட பேசப்படவே இல்லை.

கி.பி. 7ஆம் நூற்றாண்டில் திருமணச் சடங்குகளை ஒவ்வொன்றாகப் பாடுகின்ற ஆண்டாளின் பாடல்களில் தாலி பற்றிய பேச்சே கிடையாது. மாறாக, தான் கொன்ற புலியின் பல்லை எடுத்து வீரத்தின் சின்னமாக ஆண் தன் கழுத்தில் கோர்த்துக் கட்டிக் கொண்டால் அதைப் புலிப்பல் தாலி என்று குறிப்பிட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் ஆதிச்சநல்லூர் உள்பட பல்வேறு இடங்களில் தோண்டி எடுக்கப்பட்ட புதை பொருள்களில் இதுவரை தாலி எதுவும் கிடைக்கவில்லை. கி.பி. 10 ஆம் நூற்றாண்டு முதலே தமிழகத்தில் பெண்ணின் கழுத்துத்தாலி புனிதப் பொருளாகக் கருதப்பட்டு வந்துள்ளதாகக் கொள்ளலாம். அதன் பின்னரே, கோவில்களிலும் பெண் தெய்வங்களுக்குத் தாலி அணிவிக்கப்பட்டது. திருக்கல்யாண விழாக்களும் நடத்தப்பட்டன. நாளடைவில் தாலி மறுப்பு அல்லது நிராகரிப்பு என்பது கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாக மாறிவிட்டது.”

இவ்வாறு ஆய்வறிஞர் தொ.ப அவர்களே சொல்லிவிட்டார். தமிழ்ப்பண்பாடு தொடர்பாக நமக்கு சில கருத்துக்கள் உள்ளன.

அகநானூறின் 136 வது பாடல் இது.

தூவுடைப் பொலிந்து மேவரத் துவன்றி
மழைபட் டன்ன மணன்மலி பந்தர்
இழையணி சிறப்பின் பெயர்வியர்ப்பு ஆற்றித்
தமர்நமக் கீத்த தலைநாள் இரவின்
உவர்நீங்கு கற்பின்எம் உயிருடம்பு அடுவி

இப்பாடலின்படி சங்ககாலத் திருமணங்களில் ‘தாலி’ என்ற பெயரில் அல்லாமல் ‘இழையணி’ என்ற பெயரில் பெண்ணுக்கு ஒரு அணிகலன் அணிவிக்கப்பட்டுள்ளது. வாகை மரத்து இலையை மெல்லிய வெள்ளை நூலில் கட்டி அதை மணமகளின் கழுத்தில் கட்டியதாகவும் இப்பாடல் தெரிவிக்கிறது.

புறநானூற்றின் 224 வது பாடல் இது.

பூவாள் கோவலர் பூவுடன் உதிரக்
கொய்து கட்டு அழித்த வேங்கையின்
மெல் இயல் மகளிரும் இழை களைந்தனரே

கரிகால்சோழன் இறந்தபிறகு அவனது மகளிர் அல்லது மனைவியர் தாம் சூடியிருந்த மலர்களையும், அணிகலனையும் களைந்தனர் என்று தெரிவிக்கிறது. ஆக சங்க காலத்தமிழர் வாழ்வில் ‘தாலி’ என்ற பெயரில் இல்லாமல் ‘இழையணி’ என்ற பெயரில் திருமண நேரத்தில் பெண்ணுக்கு மட்டும் ஒரு அணிகலன் அணிவிக்கப்பட்டதும், கணவன் இறந்த பிறகு அந்த அணிகலன் களையப்பட்டதும் தெரிகிறது. ‘தாலி’ என்ற பெயர் தான் இல்லையே ஒழிய தாலிக்குரிய சடங்குகள் நடந்திருக்கின்றன என்பதற்கு சங்கஇலக்கியங்களில் சான்றுகள் உள்ளன.

நம்மைப்பொறுத்தவரை தாலியோ, இழையணியோ எதுவாக இருந்தாலும் திருமண நேரத்தில் அதைப் பெண்ணுக்கு மட்டும் அணிவிப்பதையும், கணவன் இறந்த பிறகு அதை அறுத்தெறிவதையும் வன்மையாகக் கண்டிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அது தமிழர் பண்பாடாக இருந்தாலும் சரி. பார்ப்பனப் பண்பாடாக இருந்தாலும் சரி. ஏற்றத்தாழ்வை - பிரிவினையைத் தூண்டும் எந்தப்பண்பாட்டையும் எதிர்க்கக் கடமைப்பட்டுள்ளோம்.

### தமிழ்த்தேசியத்தாலி

இந்தத் தாலி அகற்றும் விழா அறிவித்த நேரத்தில் நாம் தமிழர் கட்சியின் பண்பாட்டு அமைப்பான வீரத்தமிழர்முன்னணி ஒரு அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அவர்கள் ‘தமிழ்த்தேசியத் தாலி’ என்ற ஒன்றை அறிவித்துள்ளார்கள். ‘அ’ என்ற முதலெழுத்தை சங்கிலியில் கோர்த்து, ஆண் - பெண் இருவருமே அணிவார்களாம் அதுதான் தமிழ்த்தேசியத் தாலியாம்.

நம்மைப்பொறுத்தவரை தமிழ்த்தேசியத் தாலியோ, வேறு எந்த வெங்காய தேசியத் தாலியோ அனைத்துமே அவசியமற்றது. திருமணமானவர்கள் என்ற அடையாளம் எதற்காக பெண்ணுக்கோ அல்லது ஆணுக்கோ தேவை? உலகில் பொருளாதாரத்தில் முன்னேறிய நாடுகளிலோ, பண்பாட்டில். நாகரீகத்தில் முன்னேறிய நாடுகளிலோ எங்காவது

**நமது மணவாழ்வில் பெண்ணின் வாழ்க்கையைப் பெண்ணே முடிவு செய்துகொள்ளும் சூழல் இருக்கவேண்டும். வழிநடத்த வேண்டியவனாக - வழிகாட்ட வேண்டியவனாகக்கூட இல்லாமல் துணைநிற்பவனாக நம்மைநாம் மாற்றிக் கொள்ளவேண்டும்.அதற்கு அடையாளமாக வேண்டுமானால் தாலியை அகற்றலாம். தாலிமறுப்புத் திருமணம் செய்த நாம் அனைவரும் சுயவிமர்சனம் செய்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.**

திருமணமானவர்களுக்கென்று அடையாளம் போடும் பழக்கம் இருக்கிறதா?

கிறித்தவர்கள்கூட மோதிரம் மாற்றுகிறார்கள். ஆனால் அதை புனிதமானதாகவோ, மணமானவர் என்பதற்கான அடையாளமாகவோ கடைசிவரை போட்டுக் கொண்டிருப்பதில்லை.

பாலியல் வக்கிரம் பிடித்தவர்கள், இந்த அடையாளம் போடும் பழக்கம் இருப்பதனால் கழுத்தில் தாலியைப் பார்த்த உடனே, ‘திருமணமானபெண்’ என்று எந்தப் பெண்ணையும் விட்டுவைப்பதில்லை. ‘கள்ளக்காதல்’ என்ற சொல்லே திருமணமான வெவ்வேறு இணையர்களுக்கிடையே நடைபெறும் உறவைத்தானே குறிக்கிறது? (கள்ளக்காதல் என்று சமுதாயம் சொல்லும் உறவுதான் பெரும்பாலும் நல்ல காதலாக இருக்கிறது) பிறகு எதற்கு சடங்காக ஒரு தாலி? குறைந்தபட்சம் சைட் அடிக்கும் ஆணும் சரி, பெண்ணும் சரி திருமணமானவர்கள் என்பதற்காக கண்ணை மூடிக்கொண்டு போய்விடுகிறார்களா? சைட்அடிப்பதி லிருந்துகூட காப்பாற்ற முடியாத இந்தத் தாலியை, எதற்காகப் பெண் அணிய வேண்டும்?

இந்த நேரத்தில் நாம் அவசியம் கவனிக்க வேண்டிய மற்றுமொரு செய்தி என்னவென்றால், பெண்ணிய நோக்கில், சமத்துவ நோக்கில், ஏற்றத்தாழ்வுகளை அகற்ற வேண்டிய நோக்கில் இந்தத் தாலி அகற்றும் விழாக்களை திராவிடர் கழகமும், சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகமும் அறிவித்துள்ளன. இந்த நேரத்தில் இந்த விழாக்களை ஆதரிக்க வேண்டிய பொதுவுடைமை பேசும் அரசியல் அமைப்புகள், ம.க.இ.க போன்ற மார்க்சிய-லெனினியக் குழுக்கள், மாவோயிச அமைப்புகள், தமிழ்த்தேசிய அமைப்புகள் அனைத்தும் கள்ள மவுனம் சாதிப்பதை பெரியார் தொண்டர்களும், முற்போக்காளர்களும் கவனிக்கவேண்டும். தி.மு.க தலைவர் கலைஞர் கருணாநிதி, காங்கிரஸ்தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், விடுதலைச்சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன் போன்றோர் இப் போராட்டங்களுக்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவித்த நிலையில் மிகப்பெரும் போராளிகள், புரட்சியாளர்கள் என சொல்லிக்கொள்பவர்கள் அமைதி காப்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பெண்ணை ஒரு பொருளாகவும், தமக்கு மட்டுமே கட்டுப்பட்ட, உணர்வுகள் எதுவுமற்ற, அசையும் சொத்தாகவும் கருதும் போக்கு தலையெடுக்கத் தொடங்கியபோது இந்தத் தாலிப் பண்பாடு உருவாகியிருக்கும். அது இந்துப்பண்பாடாக இருந்தாலும்சரி, தமிழ்ப்பண்பாடாக இருந்தாலும் சரி, இழையணிப் பண்பாடாக இருந்தாலும் சரி எதுவாக இருந்தாலும் அழிக்கப்படவேண்டிய பண்பாடே ஆகும்.

தாலியை அகற்றிய, அகற்றப்போகிற இணையர்களில் ஆண்கள் கவனிக்கவேண்டிய முக்கியச்செய்தி என்னவென்றால், சடங்குக்காக தாலியை கட்டுவது தவறு. அதேசமயம் சடங்காக எண்ணி தாலியை மட்டும் அகற்றுவதும் தவறு. பெண்ணை அசையும் சொத்தாகக் கருதாமல், தமக்குக் கட்டுப்பட்ட - தமக்கு மட்டும் கட்டுப் பட்ட - உணர்வுகள் எதுவுமற்ற பிண்டமாகக் கருதாமல், அவர்களுடைய உணர்வுகளையும் விருப்பங்களையும் சின்னச்சின்ன ஆசைகளையும் இலட்சியங்களையும் அறிந்துகொள்ள முயற்சிக்கவேண்டும். நமது மணவாழ்வில் பெண்ணின் வாழ்க்கையைப் பெண்ணே முடிவுசெய்துகொள்ளும் சூழல் இருக்க வேண்டும். வழிநடத்த வேண்டியவனாக - வழிகாட்ட வேண்டியவனாகக்கூட இல்லாமல் துணைநிற்பவனாக நம்மைநாம் மாற்றிக்கொள்ளவேண்டும். அதற்கு அடையாளமாக வேண்டுமானால் தாலியை அகற்றலாம். தாலிமறுப்புத் திருமணம் செய்த நாம் அனைவரும் சுயவிமர்சனம் செய்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

ஆதாரம் : தெய்வமுரசு, உண்மை

## ஹைக்கூ.....



அடிமை சின்னம்
பெண்ணே !
இன்பத்தின் பக்கவிளைவு
நீ அடைந்த கர்ப்பம்.

இரமேசு

# “என்னை விமர்சிப்பவர்கள் அனைவரும் ஒரே ஜாதிக்காரர்கள்” தோழர் மதிமாறன்

தோழர் மதிமாறன் அவர்கள் 17.2.2015 இல் தனது முகநூல் பக்கத்தில் ஒரு கருத்தைப் பதிவிட்டு உள்ளார். அதாவது,

‘பெரியாரிடம் தத்துவமும் இல்லை. கோட்பாடும் இல்லை’ என்று அவதூறாகப் பேசுகிற தீவிர விடுதலைப்புலி ஆதரவு பெரியார் எதிர்ப்புத் தமிழ்த் தேசியவாதிகளைப் பார்த்து, ‘இவை இரண்டும் பிரபாகரனிடம் இருக்கிறதா?’ என்று தன்மையாகக் கூடக் கேட்கிற தைரியம், பெரியார் தொண்டர்களுக்கும் பெரியார் இயக்கங்களுக்கும் சுத்தமாக இல்லை. இது தான் பெரியாருக்கு ஏற்பட்டிருக்கிற நெருக்கடி. பெரியாருக்கு இந்த நெருக்கடியை ஏற்படுத்தியது பெரியார் இயக்கங்களே. அவர்களின் தமிழ்த்தேசிய உணர்வே.

என்று பதிவிட்டிருக்கிறார். அதற்கு எமது சிறு விளக்கத்தைக் காணுங்கள்.

பெரியாருக்குத் தத்துவமும் இல்லை, கோட்பாடும் இல்லை என்று தீவிர விடுதலைப்புலிகள் ஆதரவாளர்கள் விமர்சித்தால் அதற்கு ஒரு சரியான பெரியார் தொண்டன் பெரியாரின் தத்துவம் என்ன? கோட்பாடு என்ன? என்று விளக்குவதுதான் பெரியாரியல்.

தீவிர விடுதலைப்புலி ஆதரவாளர்கள் மட்டுமல்ல, இதற்கு முன்பு தீவிர கம்யூனிஸ்ட்டுகளும், இதைவிடக் கேவலமாக விமர்சித்தார்கள். உடனே அவர்களிடம் மார்க்சுக்கு தத்துவம் இருக்கா? லெனினுக்கு தத்துவம் இருக்கா? மாவோவுக்கு கோட்பாடு இருக்கா என்றெல்லாம் எந்தப் பெரியார் தொண்டனும் மோடுமுட்டியாகப் பேசவில்லை. அப்படிப் பேசியிருந்தாலும் அது தவறுதான்.

உண்மை ஏட்டிலும், விடுதலை ஏட்டிலும் சிறுசிறு நூல்களாகவும் கம்யூனிஸ்ட்டுகளுக்கு விளக்கம் தரப்பட்டது. பெரியார் மய்யம் சார்பில் மார்க்சியமா? பெரியாரியமா? என்ற பெயரில் விரிவான விளக்கநூல் வெளியிடப்பட்டது. பெரியாரைக்கொச்சைப்படுத்திய மார்க்சிஸ்டுகளுக்கு திராவிடர் கழகத்தலைவர் தோழர் வீரமணி அவர்கள் அறிவார்ந்த விளக்கங்களைக் கொடுத்தார். தோழர் பி.இராமமூர்த்தி எழுதிய விடுதலைப் போரும் திராவிட இயக்கமும் எனும் நூலுக்கு மறுப்புரையாக, ‘விடுதலைப் போரும் திராவிடர் இயக்கமும் - உண்மை வரலாறு’ எனும் தலைப்பில் வெளிவந்த இந்நூல் 612 பக்கங்களைக் கொண்டதாகும். திராவிட இயக்கத்தைக் கொச்சைப்படுத்துவது - நீதிக்கட்சியைக் கீழிறக்கமாகப் பேசுவது பெரியார் அவர்களின் வைக்கம் போராட்டம் குறித்த உண்மையை மறைத்துத் தகடுதத்தம் செய்வது போன்றவைகளுக்கு மரண அடி கொடுக்கும் வண்ணம் 1985 இல் இந்நூல் வெளியிடப்பட்டது.

அம்பேத்காரிஸ்ட் என அறியப்படும் எழுத்தாளர் தோழர் இரவிக்குமார் அவர்கள் தொடர்ச்சியாக இன்றுவரை பெரியாரைக் கொச்சைப்படுத்தி எழுதிக்கொண்டுதான் இருக்கிறார். பதிலுக்கு அவரிடம்போய் எந்தப் பெரியார் தொண்டனும் அம்பேத்கரை விமர்சித்ததில்லை. அப்படிப்பட்ட அணுகுமுறையே தவறு. தோழர் இரவிக்குமார் எழுதிய விமர்சனங்களுக்கு உரிய பதிலை ‘பெரியாரைத்திரிக்கும் புரட்டுக்களுக்குமறுப்பு’ என்ற பெயரில் 2003 இல் சிறு நூல் ஒன்றை தந்தை பெரியார் திராவிடர் கழகம் வெளியிட்டது.

தீவிர விடுதலைப்புலி ஆதரவாளர்கள் அது யாராக இருந்தாலும் அவர்களது வாதங்களுக்கு உரிய பதிலை அனைத்து பெரியார் இயக்கங்களிலும் உள்ள தோழர்கள் அவ்வப்போது நூலாகவும், இணையதளக் கட்டுரைகளாகவும், முகநூல் செய்திகளாகவும் வெளியிட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். தங்கள் பார்வையில் தீவிர விடுதலைப்புலி அதரவாளரும், தீவிர தமிழ்தேசிய வாதியுமான தோழர் மணியரசன் போன்றோர் தொடர்ச்சியாக பெரியாரைக் கொச்சைப்படுத்தி எழுதிவந்த கட்டுரைகளுக்கு மறுப்பாக, அண்மையில் 12.2.14 இல் ஈரோட்டில் தோழர் கொளத்தூர் மணி அவர்கள் ‘பெரியாருக்கு எதிரான முனைமழுங்கும் வாதங்கள்’ என்ற நூலை எழுதி வெளியிட்டார். தோழர் மதிமாறன் அவர்களும் அவ்விழாவில் பங்கேற்றார். குணாவுக்கு மறுப்பாக 90 களில் தோழர் விடுதலை இராசேந்திரன் அவர்கள் ‘பெரியாரைக் கொச்சைப்படுத்தும் குழப்பவாதிகளுக்கு மறுப்பு’ என்ற நூலை எழுதி வெளியிட்டார்.

பெரியாரைக் கொச்சைப்படுத்துபவர்கள் எந்தத் தளத்தில் இருந்தாலும் அவர்களிடம் சரியான பெரியார் தொண்டர்களின் அணுகுமுறை இப்படித்தான் இருந்தது,

இப்படித்தான் இருக்கும். தோழர் பிரபாகரன் பிறக்காத காலத்திலிருந்தே தோழர் பெரியார் மீது வைக்கப்பட்ட விமர்சனங்கள்தான் மறுபடியும் மறுபடியும் சம்பவங்களை மட்டும் மாற்றி மாற்றி அநேகன் பட தனுஷ் போல வந்துகொண்டிருக் கின்றன. புது விமர்சனம் எதுவும் இல்லை.

தோழர் பிரபாகரன் அவர்களையோ, தோழர்கள் அம்பேத்கர், மார்க்ஸ், லெனின், மாவோ என எந்தத் தலைவர்களையுமே, எப்போதுமே விமர்சிக்கும் வழக்கம் பெரியாரிஸ்ட்டுகளிடம் இல்லை. குறிப்பாக விடுதலைப்புலிகள் அமைப்பு எங்கேயும், எப்போதும் பெரியாரைக் கொச்சைப் படுத்தியதில்லை. அப்படி அவர்கள் விமர்சித்தாலும் அவர்களிடமும் இதே அணுகு முறையில் உரிய விளக்கங்களைக் கொடுக்கும் தத்துவ பலம் பெரியாரிஸ்ட்களிடம் உண்டு. தோழர் மதிமாறன் அவர்கள் பெரியார் தொண்டர்களிடம் இதுவரை இல்லாத அணுகு முறையைத் திணிக்கப்பார்க்கிறார். அல்லது ஒரு தவறான அணுகுமுறையைப் பரப்ப முயல்கிறார்.

இவ்வாறு ஒரு பதிலை சுயமரியாதை இணையதளத்தில் எழுதி வெளியிட்டோம். அதன்பிறகும் தோழர் மதிமாறன் அவர்கள் கிசுகிசு பாணியில் தொடர்ச்சியாக பெரியார் தொண்டர்கள் மீது அவதூறு பரப்பும் செயலைச் செய்துகொண்டே வருகிறார். அவற்றில் சில

> "சீமானை விமர்சிக்கும் பெரியாரிஸ்ட்டுகள் மணியரசனை விமர்சிப்பதில்லை. காரணம் மணியரசன், வை.கோவை நல்ல தலைவர் என்கிறார். இந்த நிலைப்பாட்டில் 'தெலுங்குவாடை' வீசுகிறது"

என்று விமர்சித்துள்ளார். பெரியாரிஸ்ட்டுகளைப் பொறுத்தவரை பெரியாரியலைத் தவறாக விமர்சிக்கும் எவருக்கும் உரிய பதிலைக் கொடுக்காமல் இருந்ததில்லை. இதை விளக்கமாகப் பலமுறை தோழர் மதிமாறனுக்கு எழுதியிருந்தாலும் மீண்டும் மீண்டும் அதேபோன்ற கொச்சைப்படுத்தல்களைத் தொடர்கிறார். பார்ப்பனர்களும், மனுதர்மவாதிகளும், தமிழ்த்தேசியவாதிகளும்தான் இதுவரை பிறப்பு ஆராய்ச்சியிலும், ஜாதி ஆராய்ச்சியிலும் ஈடுபட்டிருந்தனர். தற்போது அந்தப் பட்டியலில் மதிமாறனும் இணைந்துள்ளார். இனி தோழர் மதிமாறனிடம் ஜாதிச்சான்றிதழ், சுத்த ரத்தச்சான்றிதழ், மரபணுச் சான்றிதழ், போராளிச் சான்றிதழ் எல்லாம் வாங்கியபிறகுதான் பெரியார் தொண்டர்கள் பணியாற்ற வேண்டும்.

'பெரியாரிஸ்ட்டுகள் பிரபாகரனை முன்னிறுத்தி அம்பேத்கரைப் புறந்தள்ளு கிறார்கள்',

'என்னை விமர்சிப்பவர்கள் அனைவரும் வெவ்வேறு பெரியார் இயக்கங்களில் இருக்கிறார்கள். ஆனால் அனைவரும் ஒரேஜாதியைச் சேர்ந்தவர்கள்'

'பெரியாரிஸ்ட்டுகள் பார்ப்பானைப் 'பார்ப்பான்' என்றுகூடச் சொல்லத் தயங்கு கிறார்கள்' என்றெல்லாம் தொடர்ச்சியாகக் குற்றம் சாட்டிவருகிறார். அவரது ஆதரவாளர்களோ,

> 'அம்பேத்கரையே மதிமாறன்தான் பெரியார் தொண்டர்களுக்கு அறிமுகப்படுத்தினார்'
>
> 'மதிமாறன் சொல்லித்தான் பெரியார் இயக்கங்கள் சாதி ஒழிப்பு பற்றி பிற்படுத்தப்பட்டவர்களிடம் போய் பேசுகிறார்கள். அதுவரை தாழ்த்தப் பட்டவர்களிடம் மட்டும்தான் சாதி ஒழிப்புப் பற்றிப் பேசிவந்தார்கள்'
>
> 'மதிமாறனால்தான் அம்பேத்கர் கருத்துக்கள் பரப்பப்படுகிறது.'

என்று எழுதுகிறார்கள். இவற்றை தோழர் மதிமாறனும் எவ்விதக் கூச்சமும் இன்றி வழிமொழிகிறார். எந்தக் குற்றச்சாட்டுக்கும் ஆதாரம் காட்டுவது கிடையாது. குற்றவாளிகள் யார் என வெளிப்படையாகச் சொல்வதும் இல்லை. நேர்மையின்றி கிசுகிசு பாணியில் எழுதிவருகிறார். நாம் எழுப்பும் கேள்வி களுக்கும் பதில் தருவதில்லை. எழுதுவதும், கொச்சைப் படுத்துவதும் அவரது உரிமை. ஆனால் பெரியார் தொண்டர்கள் ஒரு சீமானிடம் பாடம் பயின்றது போதும். இல்லை இல்லை எங்களுக்கு இன்னும் அழுத்தமாகப் புரியவேண்டும் என்பவர்கள் தாராளமாக தொடர்ந்து அவரிடம் பாடம் கற்கலாம்.

## வழக்கறிஞர் சங்கச் செயலாளரானார் தோழர் ஜெயராஜ்

காட்டாறு ஏட்டின் சட்ட ஆலோசகரான வழக்கறிஞர், தோழர் ஜெயராஜ் அவர்கள் ஒட்டன்சத்திரம் நகர வழக்கறிஞர் சங்கத்தின் செயலாளராக போட்டியின்றித் தேர்ந்தெடுக் கப்பட்டுள்ளார். திண்டுக்கல் மாவட்ட பெரியாரிய - அம்பேத்கரிய தோழர்களுக்கு இச்செய்தி மிகவும் மகிழ்வைத் தருகிறது. தோழருக்கு காட்டாறு குழுவின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

# அழியும் பேருயிர்: யானைகள்

அ. கணேசன் (எ) இளம்பாவல்

அழியும் பேருயிர் யானைகள் என்று தலைப்பிட்ட புத்தகம் ஒன்று காட்டாறு இதழின் முகவரிக்கு வந்திருந்தது. புத்தகத்தை எடுத்துப்பார்த்தபோது அதன் முகப்பில் புத்திசாலித்தனம் நிறைந்தது என்று அனைவராலும் போற்றப்படும் அப்பாவி உயிரினமான ஆப்பிரிக்க வகைக் காட்டு யானைகள் இரண்டு நீர்நிலை ஒன்றில் நீர் அருந்துவதைப் போன்ற அழகான நிழற்படமும் கேள்விக்குறியிடப்பட்டதும் தொடர் புள்ளிகளுடன் ஆச்சரியக்குறி இடப்பட்டிருக்க வேண்டியது மான சிறு குறிப்புகளையும் பார்க்கநேர்ந்தது. நீண்டநேரம் அதிலேயே கண்கள் நிலைகுத்தி நின்று விட்டது. அடுத்த பக்கத்திற்குள் போகவில்லை திடீரென நினைவுதிரும்பிய போதுதான் எதனாலோ மனம் கணத்துப்போயிருந்ததை உணர முடிந்தது.

ஏற்கனவே நம் தமிழ்ச் சமூகத்தில் நிலவி வருகின்ற சாதி, மத, இன, வர்க்க, நிற, பால், மொழி வேறுபாடுகளால் ஏற்பட்டிருக்கிற சிக்கல்கலோடு, அரசியல், பொருளாதர, பண்பாட்டு மாற்றங்கள் சேர்ந்து உருவாக்கிய பெருந்துன்பங்களை நினைத்துக் கவலை கொண்டிருந்த என் மனதின் அழுத்தத்தை யானையின் எடையைக் காட்டிலும் பன்மடங்கு அதிகரிக்கச் செய்துவிட்டது என்பதையும் புரிந்து கொள்ளமுடிந்ததால் சற்று நேரம் கண்களை இறுகமூடியபடி அமைதியாக இருந்து விட்டு கணத்த மனதுடனேயே இந்தப் புத்தகத்தை வாசிக்கத் துவங்கினேன் பக்கங்கள் நகர, நகர வியப்பும், வேதனையும் மனதை இருகக் கவ்விக் கொண்டது.

ஒருவழியாக பின்னிணைப்பு என்று தலைப்பிட்ட அத்தியாயம் 20 தையும் படித்து முடித்தபோது, எஸ்.வி.ராஜதுரை, சு.தியடோர்பாஸ்கரன், ம.கி.லெ. தங்கப்பா, ஜெயபாஸ்கரன், ச. மாடசாமி, ச. தமிழ்செல்வன், சுந்தரராமசாமி, அ. அழகரசன் ஆகியோரின் ஆய்வுரை, மதிப்புரை, போன்ற கட்டுரைகளையும் கடந்து நான் எழுதுவதற்கு வேறெதுவும் இருப்பதாகத் தோன்றவில்லை, எனினும் இந்நூலுக்கு மிகக்குறைந்தபட்ச ஆதரவாக இதை செய்தாக வேண்டும் என்ற உந்துணர்வால் எழுதுகிறேன்.

இந்த நூலை சமூகவியல், சூழலியல், உயிரியல் குறித்த வரலாற்றுப்பார்வையுடனும், பண்பாட்டுச் சிக்கல்கள் ஊடாகவும் பயணித்து மிக நுட்பமானதொரு அறிவியல் கண்ணோட்டத் தோடு எழுதியிருக்கும் க.யோகாநந்தம், ச.முகமதுஅலியும் மிகுந்த பாராட்டுக்குரியவர்கள்.

பொதுவாக இயற்கையின் இயக்கவியலை ஒரு வரலாற்றுச் சக்கரமாக உருவகப் படுத்திக் கொண்டோமேயானால். (அறிவியல் பார்வையின் படி சக்கரம் என்பது முன்னோக்கி உருளும் தன்மை கொண்டதாகப் புரிந்து கொள்வதே சரியாக இருக்கும்)

அதை நாம் பின்னோக்கி இழுக்கும் தவறைச் செய்கிறோம் என்பதைக் காட்டிலும், அதன் ஆரக்கால்களை ஒவ்வொன்றாக உடைத்தெரியும் மாபெரும் தவறைச் செய்து வருகிறோம் என்பதை உணரமுடியும்.

அதன் அச்சு முறிந்து போகுமுன் இதுபோன்ற செயல்களைத் தடுத்து நிறுத்தியாக வேண்டும் என்கிற பல்வேறு முன் எச்சரிக்கை அறிவிப்புகளுள் ஒன்றாகவே இந்த நூலையும் கருதியாகவேண்டும்.

இயற்பியலை சிறப்புப்பாடமாகப் படித்த எனது நண்பர் ஒருவரோடு சமீபத்தில் உயிரினங்களின் இயக்கம் பற்றி உரையாடிக் கொண்டிருந்தேன். அப்போது பல்வேறு உயிரியல், தாவரவியல் ஆய்வாளர்களின் தரவுகளிலிருந்து செய்திகளைப் பகிர்ந்துகொண்டோம் அதன் போக்கில் இந்த உலகின் ஏதேனும் ஒரு உயிரினமோ, தாவர இனமோ அதன் வாழ்வியல் புறச்சூழல் அழிக்கப்பட்டு முற்றிலுமாக அழிந்து போகுமேயானால் இந்தப் பிரபஞ்சத்தின் இயக்கத்திற்கு இந்த ஒட்டு மொத்தப் பிரபஞ்சத்தின் சீரான இயக்கத்திற்கு நிச்சயம் பாதிப்பாக இருக்கும் என்பதாகவும், நாம் வாழ்ந்துவரும் புவிக்கோளத்தில் ஏற்படப்போகும் பேரழிவிற்கோ, பிரளையத்திற்கோ, (நம்மால் இப்போது தெளிவாக அனுமானிக்க முடியாத ஏதேனும் ஒரு வகையில்) ஆதாரச் செயலாகவும் அமைந்துபோகும் என்பதைப் புரிந்து கொண்டபோது அதிர்ந்துதான் போனேன்.

இந்நூலில் குறிப்பாக யானைகளின் வாழ்வியல் நெருக்கடி ஒருவகையில் நேரடியாக நம்மையும் பாதித்து விடுகிறது என்பதை உணர்த்துகிறது. எழுத்தாளரும் இயற்கையியல், உயிரியல் ஆர்வாளருமான சு.திடோர்பாஸ்கரன் அவர்கள் உயிர்மை (2005) இதழில் எழுதியிருந்த (வேழமுடைத்த தமிழ்நாடு) கட்டுரையில் இந்தியக்காடுகளில் மொத்தம் 2,80,000 யானைகளும் பழக்கப்படுத்தி வைத்துள்ள 3500 யானைகளும் இருப்பதாகப் பதிவு செய்திருக்கிறார்.

இந்நூலின் ஆசிரியர்கள் ச.முகமதலியும், க.யோகானந்தமும் எழுதியிருக்கும் மற்றொரு புள்ளிவிபரம் ஒன்றில் யானைகள் ஒரு நாளைக்கு சுமார் 18 மணி நேரத்தை அதற்கான உணவு தேடுவதிலேயே செலவிடுவதாகவும், மேலும் ஒரு பெரிய ஆண்யானை சுமார் 100 விருந்து 300 கிலோ வரை தாவரங்களை உண்பதா கவும், குடிப்பதற்கு மட்டும் 100 விருந்து 150லிட்டர் தண்ணீர் தேவைப்பட்டுவதாகவும் எழுதி யிருந்தார். கடும் வறட்சி காலத்தில் தண்ணீருக் காக 40 முதல் 50 கி.மீ வரை யானைகள் பயணிக்கிறதாம்.

மேலும் ஒரு யானை சுமார் 80 ஆண்டுகள் வரை வாழ்ந்தாகவும் இதேநூலில் குறிப்புகள் உள்ளன. இந்த அளவுக்கு யானைகளின் அடிப்படைத் தேவைகள் இருக்கும்போது நம்மிடம் அதற்கான காட்டுவளம் இருக்கிறதா, நீர்வளம் இருக்கிறதா என்ற கேள்விக்கு நிச்சயமாக இல்லை என்ற பதில்தான் நேர்மையானது.

காடுகளை அழித்தும், ஆக்கிரமித்தும் வேட்டையாடியும், அடிமைப்படுத்தியும், யானைகளின் வாழிடங்களின் பரப்பளவைக் குறைத்தது . அதன் பயண வழித்தடங்களில் குறுக்கிட்டது என அந்த அப்பாவி விலங்கின யானைகளுக்கு மட்டுமல்லாது இன்னபிற காட்டு உயிரினங்களுக்கும் சேர்த்தே (சாதி, மத, சுரண்டல் வெறிபிடித்த) மனிதர்கள் செய்து வரும் கொடுமைகள் ஏராளம்.

அருள்கூர்ந்து எண்ணிப்பாருங்கள். இதனால் அழிந்துவருவது காட்டுயிர்கள் மட்டுமல்ல நாமும்தான். காடுகளை அழித்தால் மலை-மழைவளம் இழந்தோம், நீர்வள மிழந்தோம் அதனால் விவசாயம் இழந்தோம், உணவு உற்பத்தி விவசாயம் அழிந்து வருகிறது. விலைவாசி மிகவும் உயர்ந்து வருகிறது, ஆதாரத் தொழிலான விவசாயம் அழிந்துவருகிறபடியால் அது தொடர்பான மற்ற அடிப்படைத் தொழில்களும் உற்பத்தியும் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் வேலையின்மை, வருமானமின்மை, வறுமை, நோய் என ஒன்றின் தொடர்ச்சியாக ஒவ்வொன்றிலும் பாதிக்கப்பட்டு, நிம்மதி இழந்து, மூடநம்பிக்கையில் ஆழ்ந்து “கஞ்சிக்கில்லார் அதன் காரணம்யாதென்றும் அறியார்” என்கிற பாரதிதாசனின் வரிகளை மெய்ப்பிக்கும் வண்ணம் விடையேதும் தெரியாமலேயே மரணித்துப்போகிறோம்.

இப்படியே நூலின் எல்லாப் பக்கத் தரவுகளையும் பார்த்து, விவரித்துக் கொண்டே போகமுடியும் அதற்குத் தற்போது முடிவே கிடையாது. ஆகவே நூலாசிரியர்களின் வரிகள் ஊடாகவே முடிவை நோக்கி நகரலாம்.

‘மனிதாபிமானத்திற்கும்-விலங்காபி மானத்திற்கும் இடையிலான உரிமைச் சமன்பாடு சீர்குலைந்து போய்விடுமோ என நூலாசிரியர்கள் அஞ்சுகிறார்கள்”நம் பார்வையில் அதைக் காட்டிலும் கூடுதாலான அச்சமே நிலவருகிறது.

அதாவது இங்கே நிகழ்ந்து வரும் சாதி - மதவெறி மோதல்களும், கௌரவக் கொலைகளும், பாலியல் வன்முறைகளும், தீண்டாமைக் கொடுமைகளும், மொழி, இனவெறி மோதல்களும்... இன்னும் பட்டியல் நீளும் அளவுக்கு நிகழ்ந்து வரும் கொடுமைகளை பார்க்கிறபோது ஒன்று மிகத் தெளிவாகத் தெரிகிறது. ஜீவகாருண்யம் வளர்ந்த மண்ணில் மானமும், அறிவும் கேள்விக்குறியாகி விட்டது.

எனவே விலங்காபிமானத்தை மட்டுமல்ல மொத்தமாக இயற்கையை நேசிக்க வேண்டு மானால் மனமும், அறிவுத்தாகமும்; கொண்ட மனிதாபிமானத்தை உயிர்ப்பித்தாக வேண்டும். இதற்க்கான பணிகளை சிரமேற்கொண்டு செய்து வருகிற பெரியாரிய, அம்பேத்காரிய, மார்க்சியச் செயல் பாட்டாளர்கள் தங்களின் எதிர்காலச் சந்ததிகளுக்கு மிக செழிப்பானதொரு புவிப் பரப்பை (எல்லாவகையிலும்) உருவாக்கி வைப் பதற்கான போரட்டத்தில்தான் இருக்கிறார்கள். அதில் ச.முகமதலி, க.யோகாநந்தம் ஆகியோரது விருப்பங்களும் உள்ளடங்கியதுதான் என நான் உறுதியாக நம்புகிறேன். எனவே இந்நூலை இயக்கத்தோழர்கள் மற்ற சமூகஆர்வலர்கள் அனைவரும் படிக்கவும், பரிந்துரைக்கவும் வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

# இராமானுஜரால் பழைமை காப்பாற்றப்பட்டது!

நமக்குள் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படும் சீர்திருத்தம் பொது மனித சமூகத்தில் மக்களின் பிறப்பின் காரணமாக உயர்வு தாழ்வு கற்பிப்பதாகும். இந்த முறை நமது இந்தியாவைத் தவிர வேறு எந்த நாட்டிலும் இவ்வளவு மோசமான கற்பனையின் மீது கையாளப்படுவதே இல்லை. அடுத்தபடியானது வாழ்க்கையில் இருந்து வரும் பழக்க வழக்கம், மூட பக்தி, குருட்டு நம்பிக்கை ஆகியது போன்ற வகைகள்; இவைகள் எல்லாம் நமது நாட்டில் விசேஷமாய் மதம், கடவுள், மோட்சம் என்பதன் பெயர்களாலேயே அவைகளை ஆதாரமாய் வைத்தே நடைபெற்று வருகின்றது. என்றாலும், இவைகளை சீர்திருத்தம் செய்யவேண்டும் என்கிற கவலை வெகுகாலத்திற்கு முன்னதாகவே ஏற்பட்டது என்று சொல்லலாம். அதாவது புத்தர், இராமானுஜர், திருவள்ளுவர் முதலிய பல பெரியோர் காலத்திலேயே ஏற்பட்டதாகச் சொல்லலாம்...

எந்தக்காரணங்களால் உண்மையான சீர்திருத்தம் வெற்றி பெறவில்லையோ, என்ன என்ன சாதனங்கள் அச்சீர்திருத்தத்திற்குத் தடையோ அவைகளை வேருடன் அழிக்கத் தயாராயிருக்க வேண்டும். அவைகளில் ஒரு சிறு தாரையாவது கிளை வேரையாவது மீத்தி வைத்துக் கொண்டு சீர்திருத்தம் செய்யலாம் என்று எந்தவிதமான சீர்திருத்தக்காரர்கள் நினைத்தாலும் அவர்கள் ஒருக்காலமும் வெற்றி பெறமாட்டார்கள் என்பது எனது உறுதி...

உதாரணமாக இராமானுஜர் நாமத்தையும், பூணூலையும் பழைய சின்னம் என்பதாகக் கருதி அதை வைத்துக் கொண்டு 'பறையன்' என்பவர்களை யெல்லாம் பிடித்து நாமமும், பூணூலும் போட்டு மக்களைச் சமத்துவம் அடையச் செய்வது என்பதான சீர்திருத்தம் செய்தார் என்பதாகச் சொல்லப் படுகின்றது. இதனால் பழைய சின்னம் காப்பாற்றப்பட்டதே தவிர, மக்களுக்கு சமத்துவம் கிடைத்ததா? சமத்துவ உணர்ச்சி உண்டாயிற்றா?. நாமமும் பூணூலும் உடையவர்களுக்குள்ளாகவே உயர்வு தாழ்வும், அதுகள் இல்லாதவர்களை தாழ்மையாய்க் கருதுவதும் இன்று சூரியன் போல் துலங்குகிறது...

வேதம் என்றும், சாஸ்திரம் என்றும் புராணம், என்றும் சொல்லப்படுவனவாகிய மனித வர்க்கத்தின் வாழ்க்கை நலத்திற்கு இலக்காக உண்டாக்கப்பட்டது என்று சொல்லும்படியான ஆதாரங்களும், அவைகளுள் முக்கியக் கலைகளாகக் கொண்டாடப்படும் பல புராணங்களும் இதுவரை மக்களுக்கு என்ன நன்மையைக் கொடுத்து வந்திருக்கின்றது என்று யோசித்துப் பாருங்கள். அதிலும் தென் இந்திய வாசிகளும், அவர்களுள் சிறந்த பண்டிதர்கள் என்பவர்களும் பக்தி விசுவாசத்துடனும், கலா ஞானத்துடன் கொண்டாடும் புராணங்கள், இதிகாசங்களாகிய பாரதம், இராமாயணம், சிவபுராணம், விஷ்ணு புராணம், பெரியபுராணம், திருவிளையாடல் புராணம் என்பவைகள் போன்ற கலைகளால் இதுவரை மக்களுக்கு ஏற்பட்ட பலன் என்ன?...

ஆனால், அச்சின்னங்களுக்கும் கலை களுக்கும் வக்காலத்து பேசுபவர்களால் சீர்திருத்தக் காரர்களுக்கும் அனுகூலமான ஆதாரங்கள் அவைகளில் எங்கேயோ இருப்பதாக சொல்லப் படுகின்றது. அது வெறும் மயக்கம் என்பதும் நம்மை ஏமாற்றுவதற்கு உபயோகப்படுத்தக் கூடியது என்பதும் எனது அபிப்பிராயம்.

பறையன், பள்ளன் என்பவர்கள் (கொடுமை செய்யப்பட்டவர்கள்) எல்லோரும் கோயிலுக்குள் போனதாகவும் கடவுள் ஏற்றுக் கொண்டு தனக்குள் ஐக்கியப்படுத்திக் கொண்டதாகவும் சொல்லப்படுவதை பழைய கலைகளாக உபயோகிக்கின்றார்கள். ஆனால், அவை இப்போது ஏன் அனுபோகத்தில் இல்லையென்றால் அந்தப் பறையன் வேறு, இந்தப் பறையன் வேறு என்று சொல்லி வெளியே தள்ளி விடுகின்றார்கள். இந்த கலையை எதற்காகக் காப்பாற்ற வேண்டும்? மனிதருக்குத்தான் பறையனில் வித்தியாசமிருக்குமே ஒழிய சாமிக்குக் கூடவா வித்தியாசம் என்றால், கலைகளுக்கு ஆபத்து வந்து விட்டது என்கிறார்கள்.

ஆகவே இந்நாட்டிலுள்ள பழைய சின்னங்களையும், ஓவியங்களையும், கலைகளையும் காப்பாற்றிக் கொண்டு சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று சொல்லுகின்றவர்கள் என்றைக்குமே வெற்றி பெற மாட்டார்கள் என்று உறுதியாய்ச் சொல்லுவேன். இதுவரை நமது நாடு சீர்திருத் தப் பலன் அடையாததற்கு இந்த உணர்வுக்காரர்களேதான் முக்கிய காரண கர்த்தர்கள் என்றும் சொல்லுவேன். எனவே இந்த சில உரைகளால் சீர்திருத்தக்காரர்கள் நிலைமையைப் பற்றிப் பேசினேன்.

தோழர் பெரியார் - குடி அரசு - 02.12.1928



# தாலியை அறுத்தெரியும் வேலையே முக்கியவேலை !

சகோதரர்களே! தென்னாட்டில் இதுவரை நடந்த சுயமரியாதைக் கல்யாணங்களுக்குள் இதுவே முதன்மையானது என்று சொல்வேன். என்னவெனில் இந்தக் கலியாணத்தில் பெண்ணின் கழுத்தில் கயிறு (தாலி) கட்டவில்லை. மணமக்களைப் பெற்றவர்கள் இருவரும் மிகத் துணிச்சலான சுயமரியாதை வீரர்கள் என்பது அவர்களது உபந்நியாசத்திலிருந்தே பார்க்கலாம். தாலி கட்டுவது ஒழிந்தாலல்லது நமது பெண்கள் சமூகம் சுதந்திரம் பெற முடியவே முடியாது.

பெண்கள் மனிதத்தன்மை அற்றதற்கும் அவர்களது சுயமரியாதை அற்றத்தன்மைக்கும் இந்தப் பாழும் தாலியே அறிகுறியாகும். புருஷர்களின் மிருக சுபாவத்திற்கும் இந்த தாலி கட்டுவதே அறிகுறியாகும். ஆனால் தங்களை ஈனப்பிறவி என்று நினைத்துக் கொண்டிருக்கும் பெண்களுக்கு இந்த வார்த்தை பிடிக்காதுதான். இப்போது தாலி கட்டிக் கொண்டிருக்கும் பெண்களுக்குச் சுயமரியாதை உணர்ச்சி வந்திருந்தால் அறுத்தெரியட்டும். அல்லது புருஷர்கள் கழுத்திலும் ஒரு கயிறு கட்ட வேண்டும். தங்களைத் தாங்களே அடிமை என்று நினைத்துக் கொண்டிருக்கின்ற சமூகம், என்றும் உருப்படியாகாது.

நம்மை நாம் சூத்திரர்கள், இந்துக்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கும் கீழ்மைக் குணமே நம் நாடு அடிமையாய் இருப்பதற்குக் காரணமாயிருப்பது என்பது போலவே பெண்கள் புருஷனுக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும். அதிலும் தாலி கட்டின புருஷனுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்னும் உணர்ச்சிகள் பெண்களை மிருகமாக்கி இருக்கின்றன. ஆதலால், அப்பேர்ப்பட்ட மிருக உணர்ச்சியையும், அடிமை உணர்ச்சியையும் ஒழிக்க முயற்சித்த இந்த மணமக்களையும், அதற்கு உதவியாயிருந்த பெற்றோர்களையும் நான் மிகப் போற்றுகிறேன்.

பெண்கள் முன்னேற்றத்தில் கவலை உள்ளவர்கள் பெண்களைப் படிக்க வைக்கும் முன் இந்தக் கழுத்துக் கயிற்றைத் (தாலியை) அறுத்தெறியும் வேலையையே முக்கியமாய் செய்ய வேண்டுமென்று சொல்லுவேன்.

தோழர் பெரியார் – 13.07.1930–குடிஅரசு

# கருந்திணைப் பண்பாடு
## ஒருங்கிணைக்கும்
# உடலியல்–உளவியல் பயிலரங்கு



ஆண் - பெண் உடலியல் கூறுகள்
பெண்களின் மாதசுழற்சி
ஆண்கள் பருவமடைதல்
பருவகாலத்தின் உடலியல், உளவியல் மாற்றங்கள்
காதல் அறிவியல்
காதல் உணர்வுகளைத் தூண்டும் சுரப்பிகள்
மயக்க நிலை
ஈர்ப்பு நிலை
நீண்டகால உறவுநிலை
நட்பும் காதலும்
பாலின சமத்துவம்
போன்ற பல்வேறு தலைப்புகளில் வகுப்புகள்

பதின்வயதினரைக் கையாளுவதில் உள்ள சிக்கல்களைச்
சரிசெய்யும் நோக்கில் இப்பயிலரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

நாள்:
மே 1 முதல் 3 வரை
15 முதல் 24 வயது வரை உள்ள பெண்கள் மட்டும்

மே 4 முதல் 6 வரை
15 முதல் 24 வயது வரை உள்ள ஆண்கள் மட்டும்

இடம்: கொடைக்கானல்
நன்கொடை: 3 நாட்கள் உணவு, தங்குமிடம் 1000.00 மட்டும்

நன்கொடை செலுத்த வேண்டிய வங்கி எண்:
karunthinaipanpaadu, KVB, Dharapuram, 11261352553
IFSC: KVBL0001126

2015
**மே 1–6**
**கொடைக்கானல்**

கருந்திணை

தொடர்புக்கு: karunthinai@gmail.com, 94450 56245

வெளியீடு: சுயமரியாதை கலைப் பண்பாட்டுக் கழகம்

ஆக்கங்கள், விமர்சனங்களுக்கு: காட்டாறு, 1/810, முத்தமிழ்நகர், நத்தம்சாலை, திண்டுக்கல். 624 003 kaattaaru2014@gmail.com